விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 17 வியாழக்கிழமை (03.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 288

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பொறுப்புக்கூறத் தவறின் சர்வதேச விசாரணை

## இலங்கைக்கு மீண்டும் அமெரிக்கா எச்சரிக்கை



(நியூயோர்க்)

**இலங்கையில் இடம்பெற்ற போருக்கு பின்னரான பொறுப்பு கூறுவது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது போனால் அது தொடர்பிலான சர்வதேச விசாரணையைக் கோரும் அழைப்புக்கள் தொடரும் என அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 24-வது அமர்வு கடந்த வாரம் முடிவுக்கு வந்துள்ளது. இந்நிலையில், இந்த அமர்வு குறித்து அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் பேச்சாளர் பணியகத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே நவநீதம்பிள்ளையின் வாய்மூல அறிக்கைக்கு இவ்வாறு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, சிரியா, சூடான், கொங்கோ, மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளின் மனிதவுரிமை 20-ம் பக்கம் பார்க்க

## நாடு திரும்பினார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 68-வது பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அதிகாலை நாடு திரும்பினார்.

ஜனாதிபதி நேற்று அதிகாலை 4.15 அளவில் அம்பாந்தோட்டை மத்தல விமான நிலையத்தை வந்தடைந்ததாக ஜனாதிபதியின் ஊடக இணைப்பாளர் விஜயானந்த ஹேரத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் 22-ம திகதி திகதி அமெரிக்கா 20-ம் பக்கம் பார்க்க

## அரசு-கூட்டமைப்பு பேச்சுக்கு சர்வமத அமைப்பு மத்தியஸ்தம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுகளுக்கு மத்தியஸ்தத்தை வழங்க சர்வமத அமைப்பு ஒன்று முன்வந்துள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் அவ்வமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள் ஒன்றியம், சர்வமதப் பிரதிநிதிகள் குழு என 10 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் அங்கம் வகிக்கும் தர்மசக்தி வலையமைப்பு என்ற சர்வமத நல்லிணக்க அமைப்பே இதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது.

இவ்வமைப்பின் முக்கிய கூட்டம் இவ்வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன்போது, சந்திப்புக்கு திகதி வழங்குமாறு 19-ம் பக்கம் பார்க்க

## பதவிப்பிரமாணம் எடுப்பது எப்போது?

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உட்பட ஆளும் கட்சி உறுப்பினர்கள் யார் முன்னிலையில் பதவிப்பிரமாணம் எடுப்பது எப்போது எடுப்பது என்பது தொடர்பான முடிவு நேற்றை கூட்டத்திலும் தீர்மானிக்கப்படவில்லை எனத்தெரிய வந்துள்ளது.

அத்தோடு நாளை மறுதினம் 4 ஆம் திகதி மீண்டும் கூட்டப்படும் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம் 19-ம் பக்கம் பார்க்க

## காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கிற்கு வழங்க வேண்டும்!

### அமைச்சர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து



(கொழும்பு)

காணி அதிகாரம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தர்ப்பால் மாகாண சபை அதிகாரங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அரசமைப்பு அதிகாரங்கள் நீதிமன்றத் தீர்ப்பினூடாக மாற்றப்படாது. நாடாளுமன்றத்தால் மட்டுமே அதை மாற்ற முடியும் என்று சிரேஷ்ட அமைச்சரும் முன்னாள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுத் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

வடக்குமக்கள்வழங்கிய ஆணைக்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் நிறுவப்படவுள்ள வடமாகாண சபைக்கு அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணசபைக்குரிய அனைத்து அதிகாரங்களையும் அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் குறித்து விவரிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு,

13-வது திருத்தச்சட்டத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்து நாம் நன்கு ஆராய வேண்டும். 20-ம் பக்கம் பார்க்க

## பாலித கோஹனவுக்கு ஐ.நாவில் உயர் பதவி

(நியூயோர்க்)

இலங்கையின் ஐ.நாவுக்கான நிரந்தரப்பிரதிநிதியான பாலித கோஹனவை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது உயர் பதவிக்கு தெரிவு செய்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 68 ஆவது அமர்வுக்கு பொதுச்சபையின அதியுயர் சட்ட அமைப்பான ஆறாவது குழுவுக்கே அவரை தலைவராக தெரிவு செய்துள்ளது.

ஐ.நா. பொதுச்சபையின் ஆறாவது குழுவுக்கு தலைமை தாங்க தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையராக கலாநிதி கோஹன உள்ளார்.

1995-ம் ஆண்டு தொடக்கம் 2005 வரை 20-ம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் கூட்டம் குழப்பத்துடன் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாணசபையின் அமைச்சர்கள் யார் என்பது தொடர்பான தெரிவுக்கூட்டம் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாகவும் இடம்பெற்றுக் கூட நேற்றும் எந்தவித முடிவும் எட்டப்படாமல் குழப்பத்துடன் நிறைவடைந்துள்ளது எனத்தெரியவந்துள்ளது. தமிழ்த் தேசியககூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற 20-ம் பக்கம் பார்க்க

## பதவி விலகுமாறு ரணிலுக்கு அழுத்தம்

(கொழும்பு)

தலைமைத்துவ பொறுப்பிலிருந்து விலகி, மக்கள் ஆதரவுள்ள ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக நியமிக்குமாறு, அந்த கட்சியின் தொழிற்சங்க பிரதிநிதிகள் கட்சித் தலைமைத்துவத்திற்கு அறிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்கள் சிலவற்றின் தலைவர்கள் இதனைக் கூறியுள்ளனர்.

இது தொடர்பான எழுத்துமூல கோரிக்கை, தேசிய ரயில்வே சேவைகள தொழிற்சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி 19-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல்வரின் வாக்குறுதியை அடுத்து

# யாழ்.மாநகரசபை ஊழியர்களின் உண்ணாவிரத போராட்டம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் தற்காலிக ஊழியர்களின் உண்ணாவிரதப்போராட்டம் நேற்று மாலை 5 மணியுடன் முடிபிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்று முன்தினம் காலை 8 மணிமுதல் உண்ணாவிரதப்போராட்டத்தில் சுமார் 35 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டு வந்தனர்.

இவர்களுக்கு ஆதரவாக யாழ்.மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினரும் முன்னாள் சுகாதாரக் குழுத்தலைவருமான எஸ்.விஜயகாந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்நிலையில் நேற்று மாலை யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதியையடுத்து உண்ணாவிரதப் போராட்டம் முடிபிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநகரசபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழ். மாநகர சபையின் பதிலீட்டு தொழிலாளர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டதனை அடுத்து நேற்று முன்தினம் காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து தொழிலாளர்களின் நன்மை கருதி தொழில் திணைக்களமும் யாழ்.மாநகர சபை முதல்வரும் மாநகர சபை உறுப்பினர்களும் யாழ்.மாநகர ஆணையாளரும் தொழிலாளர்கள் சார்பாக நான்கு பிரதிநிதிகளும் நேற்று புதன் கிழமை மாலை 4மணியளவில் சேர்ந்து கலந்துரையாடியதன் அடிப்படையில் தீர்க்கமான முடிபு எட்டப்பட்டது.

தொழிற் திணைக்களம் தொழிலாளர்களுடன் கலந்துரையாடி பெறப்பட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று உறுதி மொழி வழங்கப்பட்டது. இதனை பரிசீலித்து நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு சேவை, மூப்பு, கல்வித்தகைமை, ஒழுக்கம் என்பனவற்றின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற முதல்வரின் உறுதி மொழியினை அடுத்து தேநீர் அருந்தியதனைத் தொடர்ந்து தொழிலாளர்களின் உண்ணாவிரதம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டது என மாநகரசபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நவாலி வடக்கு கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/நவாலி மகாவித்தியாலயத்தில் பெற்றோர், ஆசிரிய சங்கத் தலைவி திருமதி கி.சிவனேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் சி.நாகையா, கௌரவ விருந்தினர்களாக யா/நவாலி மகாவித்தியாலய அதிபர் இ.வசந்தகுமார், யா/விவேகானந்த வித்தியாலய அதிபர் க.சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக நவாலி வடக்கு ஜே/134 ஆவது பிரிவு கிராம சேவகர் அ.தனபாலரத்தினம், நவாலி வடக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ்.புருஷோத். ஆனைக்கோட்டை பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

## வானேறும் ஆறு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புலவர் முத்து இராசத்தினம் எழுதிய **வானேறும் ஆறு** கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் கிழக்கு ஸ்ரீ மாத்தனைக் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஓய்வுபெற்ற கிராமசேவையாளர் கு.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலிற்கான ஆய்வுரையை சரவணை ஸ்ரீநாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலஷண்முகனும் மதிப்புரையை வைத்திய கலாநிதி ஆ.பேரின்பநாதனும் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக பொருளியற்றுறை பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசாவும் வழங்கவுள்ளனர்.

கவிதை நூலின் முதற்பிரதியை இ.ராஜ்குமார் வெளியிட்டு வைக்க யாழ்.மேல்நீதிமன்ற ஓய்வுநிலை பதிவாளர் கு.சண்முகநாதன் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து இசையமைப்பாளர்கலாபூஷணம் செ.பொன்னுத்துரை வழங்கும் இசையும் உரையும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (அ-5)

## இன்று உலக மது தவிர்ப்பு தினம்

உலக மது தவிர்ப்பு தினம் இன்றாகும். போதைப் பொருளுக்கு கண்டிப்பாக முற்றுப் புள்ளி வைப்போம் என்பதே இந்த மது தவிர்ப்பு தினத்தின் தொனிப்பொருளாகும்.

நாட்டில் உள்ள சகல மதுபானசாலைகளும் இன்று வியாழக்கிழமை மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி இன்று நாட்டிலுள்ள சகல மதுபானசாலைகளையும் மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)


குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை

Northern Central Hospitals

24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

கண் சத்திர சிகிச்சை



விசேட நிபுணத்துவம் வாய்ந்த கண் சத்திர சிகிச்சை நிபுணரால் சகல கண்சத்திர சிகிச்சைகளும் குறைந்த செலவில் மேற்கொள் ளப்படுகின்றன. நாளாந்த கண் கிளினிக்குகளும் நடைபெறுகின்றன.

காது மூக்கு தொண்டை சத்திர சிகிச்சை

விசேட வைத்திய நிபுணரால் உடனுக்குடன் நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் மேற்கொள்ளப் படுகின்றது.



Dentel Surgery (Orthodontic) சகல விதமான பற்சிகிச்சைகள்



பற் சிகிச்சை நிலையத்தில் பல் கட்டுதல் பல்முடி போடுதல் பாலமிடுதல் என்பவற்றுடன் சகல பற்சிகிச்சைகளும் orthodontic சிகிச்சையும் தினமும் மேற்கொள்ளப்படுகின்றன.

342, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com

(சி-4984)


## ஜனாதிபதித் தேர்தலில் அனோமா பொன்சேகா?

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகாவின் மனைவியான அனோமா பொன்சேகாவை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வைப்பது தொடர்பில் அந்த கட்சி கவனம் செலுத்தி வருவதாக தெரியவருகிறது.



மேல் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக அனோமா பொன்சேகாவை போட்டியிட வைப்பதென முன்னர் தீரமானிக்கப்பட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் அதற்கு பதிலாக ஜனாதிபதித் தேர்தலில் அவரை களமிறக்க ஜனநாயகக் கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

அதேவேளை அனோமா பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்த ஆதரவு வழங்குமாறு ஜனநாயகக் கட்சியின் பிரதித் தலைவர் ஜயந்த கொட்டகொட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (செ-11)


# பாராட்டி வாழ்த்துகிறோம்

2013ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு

புலமைப் பரிசில் பரீட்சை சித்தி - 170 புள்ளி



செல்வி கேதாரணி வசீகரன்

நடந்து முடிந்த 2013 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பேர்த்தியும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவியுமான செல்வி கேதாரணி வசீகரன் 170 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எமது பேர்த்திக்கு கல்வி கற்பித்த வகுப்பாசிரியர் திருமதி எஸ்.கமலசிங்கம் சியாமளா அவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் இவர்களை வழிநடத்திய அதிபர் திருமதி சேதுராஜா கௌரி அவர்களுக்கும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் திரு.தெ.எழில்ரஞ்சன், திருமதி சா.புலேந்திரன், செல்வி பி.லீலாவதி, திரு. எஸ்.யசிதரன் ஆகியோருக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாரணி, இமையாணன் (சி-4982)

திரு.திருமதி தெய்வேந்திரன் இராஜேஸ்வரி (தாத்தா, அம்மம்மா)


## அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் கெற்பேலியைச் சேர்ந்த கேதீஸ்வரன் ரகுராம் என்பவரது 931204084 V என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலகத்தில் தனது அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும். (அ-5)


தொடர்ந்தும் மேலதிக சேவையில்...

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் (24 மணித்தியாலயம்) உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

குறிப்பு: விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4978) T.P. No.:-021 222 5392


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மன ஆரோக்கியம்

நாம் ஒருவரது வீட்டிற்குப் போயிருக்கிறோம். அவர் ஒரு கிளாஸில் பழச்சாறு கொண்டுவந்து வைக்கிறார். உடனே நாம் என்ன செய்வோம். அடுத்தவர்கள் யாரும் வருவதற்குள் அதை எடுத்து குடித்து விடுவோம்.

அதை விட்டு அதை கொண்டு வந்தவரிடம் "அதன் விலை என்ன?" என்றா கேட்டிக்கொண்டிருப்போம்.

நாம் கேட்க மாட்டோம். ஆனால் காந்திஜி அப்படி கேட்டார்.

1935 மே மாதத்தில் ஒரு நாள் காந்திஜி டெல்லியில் இருந்தார்.

அப்பொழுது அவருக்கு இரண்டு டம்ளர் மாம்பழச்சாறு கொண்டுவரப்பட்டது.

கொண்டுவந்து கொடுத்தவர் காந்திஜிக்கு உதவி செய்வதற்காக அவருடனேயே இருந்த மனுபெண்காந்தி என்ற அம்மா.

காந்திஜி அவரிடம் "இதன் விலை என்ன?" என்று கேட்டார்.

சும்மா வேடிக்கைக்காகத்தான் இப்படி கேட்கிறார் என்று நினைத்த அந்த அம்மா பதில் எதுவும் பேசாமல் இருந்து விட்டார்.

அதுவுமில்லாமல் அதன் விலையைக் கேட்டால் காந்திஜி அதைக் குடிக்க மாட்டார் என்றும் அவருக்கு தெரியும்.

நேரமும் கடந்து கொண்டிருந்தது. அந்த பழச்சாறு வைத்த இடத்தில் அப்படியே இருந்தது. காந்திஜி சாப்பிடவில்லை.

மனுபென்காந்தி பார்த்தார். மெதுவாக காந்திஜியிடம் போய் "அதைச் சாப்பிடுங்களேன்!" என்றார்.

"பழச்சாறு விலையென்னவென்று கேட்டேன். அதற்குப் பதில் இல்லை அது முதல் தவறு. பதிலை எதிர்பார்த்திருந்தும் அதைப் பற்றி விசாரிக்கவில்லை. அது இரண்டாவது தவறு. இப்படி இரண்டு தவறுகளைச் செய்துவிட்டு என்னிடம் வந்து 'இதைச் சாப்பிடுங்க' என்று சொன்னால் அது எப்படி?" என்றார் காந்திஜி.

மனுபென்காந்தி என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்துப்போய் நின்று கொண்டிருந்தார்.

காந்திஜி தொடர்ந்து சொன்னார்:

"இப்பொழுது என் முன்னால் வைத்திருக்கும் இந்த பழச்சாறு விலை கூடியதாக இருக்கும்!

இந்த பழச்சாறு இல்லாமல்கூட என்னால் இருக்க முடியும். ஆனால் அவசியமான பொருட்களை வாங்குவதற்குக்கூட வழியில்லாத மக்கள் இந்த நாட்டில் நிறையப்பேர் இருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது எனக்கு எதற்கு இந்த விலையுயர்ந்த பானம்?

இதை இப்பொழுது சாப்பிட்டால் என் உடல் வேண்டுமானால் ஆரோக்கியமாகலாம். ஆனால் என் மனம் அமைதி அடையாது. எனக்கு என்னுடைய உடல் ஆரோக்கியத்தைவிட மன ஆரோக்கியம்தான் முக்கியம்! அதனால் இதை நான் குடிக்க மாட்டேன் எடுத்துக் கொண்டு போய்விடு!" என்றார்.

அந்தச் சமயத்தில் ஓர் அகதிப்பெண் இரண்டு குழந்தைகளுடன் காந்திஜியைப் பார்ப்பதற்கு வந்தார்.

காந்திஜி உடனே தனக்கு முன்னால் இருந்த பழச்சாற்றை எடுத்து அந்தப் பெண்ணிடமும் குழந்தைகளிடமும் கொடுத்து குடிக்கச் சொன்னார். அவர்கள் அதை வாங்கி சந்தோசத்துடன் பருகினார்கள்.

அதைப் பார்த்த காந்திஜியின் முகத்தில் ஒரு புன்னகை– பரவசம்–திருப்தி! அவர் மனம் நிறைந்தது.

அப்பொழுது அவர் சொன்னார்:

ஆண்டவன் தக்கசமயத்தில் கைகொடுப்பான் என்பதற்கு இதுவே அத்தாட்சி! நான் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும்போதுகூட கடவுளின் கருணையால் அந்த சூழ்நிலை என்னை பாதிக்கவில்லை.

என்னோடு இவ்வளவு நாள் பழகியும் இங்கிருப்பவர்கள் எனக்கு அதிகவிலையுள்ள பழரசத்தை கொடுத்தார்கள். ஆனால் சரியான நேரத்தில் அதைச் சாப்பிட வேண்டியவர்களை என்னிடம் அனுப்பி வைத்து என்னை சந்தோசப்படுத்தினார் கடவுள், அவருக்கு நன்றி" என்றார் காந்திஜி.

உடல் ஆரோக்கியத்தைவிட மன ஆரோக்கியம்தான் முக்கியம் என்று சொன்னார் பாருங்கள். அதை நாம் எல்லோரும் மனப்பூர்வமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் தினமும் காலையில் கோப்பி குடிக்கும் நேரத்தில் பக்கத்து வீட்டுக்காரர் வந்து சேர்ந்து விடுவார். இவரும் தனது கோப்பியை மனப்பூர்வமாக அவரிடம் கொடுத்து விடுவார்.

"ஆண்டவன்தான் தினமும் அவரை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்" என்பார்.

"ஏன் அப்படி சொல்றீங்க" என்று கேட்டேன்.

"எனக்கு எனது உடல் ஆரோக்கியம்தான் முக்கியம். இதைக் கடவுள் புரிந்து கொண்டு எங்கள் வீட்டுக் கோப்பியை குடிக்க தினமும் அடுத்த வீட்டுக்காரரை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறார்!" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விவசாய நடவடிக்கைகளுக்கு கனடா அரசாங்கம் உதவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கு கனடா அரசாங்கம் முன்வந்துள்ளதாக இலங்கைக்கான கனடா தூதரக ஆலோசகர் ஜெனிபர் லலோன்டி தெரிவித்துள்ளார்.

யாழுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனடா தூதரக அபிவிருத்திக்கான ஆலோசகர் ஜெனிபர் லலோன்டி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை யாழ். மாவட்ட செயலகத்தில் சந்தித்து மாவட்ட விவசாய அபிவிருத்திகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போது யாழ். மாவட்டத்தில் விவசாயத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் யுத்தத்தின் பின்னர் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய நடவடிக்கைகள் குறித்து கனேடிய தூதரக ஆலோசகருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் அதேவேளை யாழ். மாவட்டத்தில் நீர்ப்பாசனம் மற்றும் குளங்கள் புனரமைப்பு செய்யப்பட வேண்டிய தேவை இருப்பதாகவும் தான் இதன்போது சுட்டிக் காட்டியதாக அரச அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதுடன் உற்பத்தி பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென்றும் அதே வேளை விசேடமாக கிராமப் புறங்களில் விவசாயிகள் பயன்படுத்தும் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்றும் தான் சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்தார்.

அதற்கு பதிலளிக்கையில்,

எதிர்வரும்காலங்களில் வடமாகாணம் மட்டுமன்றி யாழ். மாவட்டத்திலும் விவசாய நடவடிக்கை களில் விருத்தியை ஏற்படுத்தும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஓரளவான நிதி வழங்குவதற்கு கனடா அரசாங்கம் முன்வந்துள்ளதாகவும் அதற்கான உதவிகளை தூதரகத்தின் ஊடாக மேற் கொள்ளவுள்ளதாகவும் இலங்கைக்கான கனடா தூதரக அபிவிருத்தி ஆலோசகர் உறுதியளித்துள்ள்தாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# கிழக்கு மாகாணத்திற்கான ஆதரவை விலக்குவோம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஆட்சிக்கான ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை குழுத் தலைவர் ஜெமீல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலை புல்மோட்டையில் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்பட்டு வரும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாது போகுமாயின் தாம் கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்துக்கான ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாக காங்கிரஸ் அறிவித்துள்ளது.

நெடுங்காலமாக முஸ்லிம்கள் வாழ்ந்து வரும் புல்மோட்டையில் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன. இதனை தடுக்க நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத்தும் உரிய நடவ டிக்கைகள் எடுக்கவில்லை என்றும் அவர் குற்றம் சமத்தியுள்ளார். (அ-2)

# பயிற்சிப் பட்டறை

(தும்பளை)

யாழ்.மாவட்ட கருத்திட்ட சமுர்த்தி முகாமையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் சனிக்கிழமை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி (C.R.M) தொடர்பான விடயங்கள் அளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-19)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 100 |
| தக்காளி | 70 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 40 | 60 | 60 |
| கரட் | 40 | 50 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 80 | 80 |
| பாகற்காய் | 90 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 80 |
| பயற்றங்காய் | 20 | 40 | 50 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 10 | 20 | 30 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 40 | 40-60 | 100 |
| போஞ்சி | 80 | 90 | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 25 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 35-60 | 40-50 | 35-45 |
| இராசவள்ளி | [illegible] | 70 | 120 |

# இராசி பலன்

*03.10.2013*
*(புரட்டாதி 17, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*திரியோதசி காலை 6.45 மணிவரை*
*பூரம் பிற்பகல் 4.24 மணிவரை*
*இராகுகாலம் 1.32-3.02 மணிவரை*
*சுபநேரம் 7.32-9.02 மணிவரை*
*அருணந்தி சிவாசாரியார் குருபூசை*
*கேதாரேஸ்வர விரதம்*

**மேடம்** தாழ்ந்த சுபாவமுண்டு, தொழில் விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், காரிய இடையூறுகள் ஏற்படலாம், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**இடபம்** ரோக பயமுண்டு, நண்பர்கள் மூலம் சுபசெய்திகள் வந்து சேர லாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், மனச்சஞ்சலங்கள் கூடும்.

**மிதுனம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், அந்நியர் சந்திப்புண்டு, வருமானம் திருப்தி தரும், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** குடும்பத்தில் சில குறை கேட்கும் நிலையுண்டு, வாக்கு மேன்மையுண்டு, சுபவிரயங்கள் ஏற்படும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**சிங்கம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், சயன சுகமுண்டு, போசன நன்மையுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், தந்தை வழி உறவினரால் நன்மையுண்டு.

**துலாம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும்.

**விருச்சிகம்** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், அந்நியர் உதவியுண்டு, உங்கள் திறமைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**தனுசு** உடல் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், சிலருக்கு கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை உருவாகலாம், ஆன்றோர் சந்திப்புண்டு, பிரயாண பலனுண்டு.

**மகரம்** வீண்தொல்லைகள் ஏற்படலாம், முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, செலவுகள் அதிகமாகும், கௌரவக் குறைவான நாள்.

**கும்பம்** ஆபூர்வ சந்திப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணவரவு திருப்தி தரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** பகைவர்கள் விலகுவர், உடல்நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும்

## இந்தியா தொடர்ந்தும் அவதானத்துடன்

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்த போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஏன் சந்திக்க முடியவில்லை என்பது குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விளக்கம் அளித்துள்ளார்.**

ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு புதுடில்லி திரும்பும் வழியில் விமானத்தில் வைத்து செய்தியாளர்களை சந்தித்த போதே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

இதன்போது செய்தியாளர்களின் பல் வேறு கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

இவ்வேளை தங்களை சந்திக்கஇலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விருப்பம் கொண்டிருந்ததாகவும் அதனை நீங்கள் தவிர்த்து விட்டதாகவும் கூறப்படுகிறதே? என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அத்துடன் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய வெற்றி பெற்றுள்ள நிலையில் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கு அதிக அதி காரத் தைப் பெற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பத்தை இழந் தது ஏன்? என்றும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது, கடந்த மாதம் 24 ஆம் திகதிக்கும் 27 ஆம் திகதிக்கும் இடையில் ஐ.நா. வரும் போது சந்திக்க நேரம் ஒதுக்கித் தரும்படி இல ங்கை ஜனாதிபதி என்னிடம் கேட்டிருந்தது உண்மை. ஆனால், 27 ஆம் திகதி மாலை வேளையிலேயே நான் நியூயோர்க் சென்றடைந்ததால் அவரைச் சந்திக்க முடியவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்தில் இருந்தே இந்தியா வலியுறுத்தி வந்திருக்கின்றது. இப்போதும் நாங்கள் வலியுறுத்துகிறோம். இந்தியாவின் முழுக்கவனமும் அது தொடர்பிலானதாகவே இருக்கும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பதிலளித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதை தவிர்ப்பதற்காக, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்துக்கு தாமதமாக சென்றதாக வோஷிங்டனிலுள்ள வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே. (அ-2)

## மொபிடெலின் விசேட முற்கொடுப்பனவு அட்டை

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு வாடிக்கையாளர்களின் நலன்கருதி இலங்கையின் தேசிய தொலைத் தொடர்பு சேவைகளை வழங்கும் ஸ்ரீலங்கா ரெலிகொம் மொபிடெல் விசேட IDD முற்கொடுப்பனவு அட்டைகளை அறிமுகம் செய்துள்ளது.

விசேடமாக முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்படும் இம்மீள் நிரப்ப அட்டையானது இரண்டு விதமான பணப்பெறுமதிகளை கொண்டது.

இதன்படி 189 ரூபா பெறுமதியான அட்டையில் 300 ரூபாய் பெறுமதியான அழைப்புக்களையும் 100 ரூபா பெறுமதியான SMS சேவையினையும் பெற்றிட முடியும். மேலும் 589 ரூபா பெறுமதியான அட்டையில் 900 ரூபாய் பெறுமதியான அழைப்புக்களையும் 400 ரூபா பெறுமதியான SMS சேவையினையும் பெற்றிட முடியும்.

இந்த விசேட வெகுமதி திட்டம் குறித்த மேலதிக விபரங்களுக்கு www.mobitel.lk எனும் இணையத்தளத்தை பார்வையிடுவதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## வலி.வடக்கின் 3 கிராமங்களுக்கு தனியார் பேருந்து சேவை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட வலி. வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட மூன்று கிராம மக்களின் போக்குவரத்து வசதி கருதி தனியார் பேருந்து சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கிற்குட்பட்ட மாவைகலட்டி, வீமன்காமம், கொல்லங்கலட்டி ஆகிய மூன்று பிரதேசங்களுக்கே காங்கேசன்துறையிலிருந்து தனியார் பேருந்து சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் போக்குவரத்து வசதிகளின்றி பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இதேவேளை, இப்பிரதேச மாணவர்கள் 3 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் நடந்து வந்தே தமது பாடசாலைக்கு பயணம் மேற்கொண்டு வந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸார் தனியார் மினிபஸ் சங்கத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் காலை, மதியம், மாலை என ஒரு நாளுக்கு மூன்று தடவைகள் அப்பகுதிக்கு தனியார் மினி பேருந்து சேவையினை நடத்துவதற்கு தனியார் மினிபஸ் சங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது என தெரிய வந்துள்ளது.

(அ-6)


# கிளிநொச்சி மகா வித்தியாலயம்

| பெயர் | புள்ளி | நிலை |
|---|---|---|
| 1. யோகலிங்கம் கோபிகா | 191 | 01 |
| 2. சிறிதரன் பவித்திரன் | 183 | 7 |
| 3. றொபேட்சன் அபினயா | 180 | 11 |
| 4. குணாநந்தன் அபிஷன் | 179 | 13 |
| 5. சத்தியமூர்த்தி சுருதி | 177 | 16 |
| 6. விநோதரன் லோஜிகா | 174 | 21 |
| 7. இராஜேந்திரன் யுவாஜினி | 174 | 21 |
| 8. விக்னேஸ்வரன் சிபானுகன் | 172 | 30 |
| 9. நாகலிங்கம் பிரதாபன் | 172 | 30 |
| 10. உதயகுமார் சுரேணுகா | 172 | 30 |
| 11. ஜெகதீஸ்வரன் கம்சாஜனி | 171 | |
| 12. உமாபதீஸ்வரன் ஆனந்தி | 169 | |
| 13. இராஜநாதன் டிசபத்மன் | 169 | |
| 14. ரவிதரன் மதுசாளினி | 169 | |
| 15. சபேஸ் ஜானுகா | 165 | |
| 16. செல்வராசா ஜெனட்நிருசா | 164 | |
| 17. டினேந்திரகுமார் சுஸ்மிதா | 164 | |
| 18. உதயகுமார் கிசோப்பிரியன் | 164 | |
| 19. பரனீஸ்வரன் ஜஸ்ரீனா | 164 | |
| 20. ராஜ்குமார் அபினயா | 163 | |
| 21. புஸ்பாகரன் குபேரன் | 163 | |
| 22. விமலநாதன் சஞ்சீதா | 163 | |
| 23. விமலராஜன் விதுசன் | 162 | |
| 24. குபேந்திரன் டிலக்ஷனா | 162 | |
| 25. பாஸ்கரன் எழில்சாந் | 161 | |
| 26. தியாகராஜ் லோசன் | 160 | |
| 27. முருகமூர்த்தி கஜனிதரன் | 160 | |
| 28. சிவநாதச்செல்வம் சஞ்சிகா | 159 | |
| 29. பத்மராசா கயல்விழி | 159 | |
| 30. சுரேந்திரன் யதுர்சிகா | 159 | |
| 31. சுந்தரலிங்கம் சஞ்சிகா | 162 | |
| 32. வையகுருநாதன் தாமிரா | 158 | |
| 33. சோதிரவி லக்சியா | 156 | |
| 34. விஜயகுமார் பிரிந்தியா | 155 | |
| 35. சுரேஸ்வரன் கவினா | 154 | |
| 36. பாலகிருஸ்ணன் தனுசியா | 154 | |
| 37. ஜோன்கெனடி துவாரகா | 153 | |



புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையில் சித்தி எய்திய மாணவர்கள்

*தரம் 5 புலமைப் பரிசில் சித்தி பெற்ற மாணவர்களையும் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவியையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*




மாவட்டமட்டத்தில் முதலிடம் பெற்ற கோபிகா அதிபர். பிரதி அதிபர். கற்பித்த ஆசிரியர்களுடன்

**மாவட்டத்தில் அதிகூடிய மாணவர்கள் சித்தி**

**பாராட்டி வாழ்த்துவோர்:**

ஆசிரியர் நலன் புரிச் சங்கம், கிளிநொச்சி மகா வித்தியாலயம்.




மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி யோகலிங்கம் கோபிகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்சாகமுடன் கல்வி கற்றால் பரீட்சையில் வெற்றி நிச்சயம்

## முல்லையில் முதலிடம் பெற்ற மாணவி இ.விதுர்சியா



எனது பெற்றோர் மற்றும் பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களின் விடாமுயற்சி காரணமாகவே நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் முதலாமிடத்தினை பெறக் காரணம் என மு/விசுவமடு விசுவநாதர் ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் இராமக்கிளி விதுர்சியா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாணவி தெரிவிக்கையில்,

எனது குடும்பம் போரால் பாதிக்கப்பட்டுள்ளது. எனது தந்தை சாதாரண கூலி வேலை செய்தே எனது குடும்பத்தை நடத்தி வருகிறார்.

எனது கல்வி முயற்சிக்கு எனது பெற்றோர்கள் அல்லும் பகலும் எனக்கு உற்சாக மூட்டியதன் காரணமாக நான் பாடசாலையின் கற்றல் செயன்முறைக்கு என்னை முழுமூச்சுடன் அர்ப்பணித்தேன்.

பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர் தக்கதருணத்தில் அர்ப்பணிப்புடன் என்னையும் சக மாணவர்களையும் வழி நடத்தினார். அவரின் வழி நடத்தலைப் பின்பற்றி பரீட்சையின் நுட்ப முறைகளை அறிந்து அதற்கேற்ப செயற்பட்டு சவால்களை மனத்திடத்துடன் எதிர் கொண்டதன் பயனாக பரீட்சையில் நாம் சித்தியடைந்தோம். இது எனது வெற்றி மட்டுமல்ல பாடசாலை சமூகத்தின் வெற்றியுமாகும் என்றார். (அ)

# வைத்தியராவதே எனது எதிர்கால இலட்சியம்

## கிளி. மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி கோபிகா



(கிளிநொச்சி)

தரம் -5 புலமைப்பரிசில் முன்னோடிப் பயிற்சிப் பரீட்சைகள் அனைத்திலும் பங்கு பற்றி பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் ஆலோசனையின்படி கல்வியை தொடர்ந்தமையே தனது இவ் வெற்றிக்கு காரணமென தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்ட நிலையில் முதலிடத்தைப் பெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி யோகலிங்கம் கோபிகா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் தனது தாயை இழந்த துயரிலும் தனது கல்வியைத் தளர்வின்றி கற்று அண்மையில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 191 புள்ளிகளைப் பெற்றுள்ள கோபிகா தனது வெற்றி குறித்து வலம்புரிக்கு அளித்துள்ள விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மாணவி தொடர்ந்து தெரிவிக்கையில்,

எனது கல்விக்கு உறுதுணையாக எனது பாடசாலை அதிபர், ஆசிரியர் மற்றும் சகோதரர், உறவினர்கள் இருந்துள்ளனர்.

எனது எதிர்கால இலட்சியம் நான் ஓர் வைத்திய நிபுணர் ஆக வருவதேயாகும். மேலும் நான் அனைத்து பயிற்சி பரீட்சைகளிலும் தோற்றினேன். அதிபர் , ஆசிரியரின் ஆலோசனைகளின் வழி செயற்பட்டேன். என்போன்ற தம்பி, தங்கையரும் ஊக்கமுடன் கல்வி கற்றால் கல்வியில் வெற்றிபெற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7-5)


BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | அடகுத் திகதி | ஏல விற்பனைத்திகதி இடம் நேரம் |
|---|---|---|
| பருத்தித்துறை கிளை(மந்திகை, மருதங்கேணி விரிவாக்கற்கிளைகள் உட்பட) | 04.01.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 04.07.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | பருத்தித்துறை கிளை 2013 ஒக்டோபர் 5ஆம், 6ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| வல்வெட்டித்துறை கிளை | 07.01.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 07.07.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | வல்வெட்டித்துறை கிளை 2013 ஒக்டோபர் 8ஆம் திகதி (செவ்வாய்) காலை 9.30 மணிக்கு |
| நெல்லியடி கிளை (கரணவாய் விரிவாக்கற்கிளை உட்பட) | 11.01.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 11.07.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | நெல்லியடி கிளை 2013 ஒக்டோபர் 12ஆம், 13ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| சாவகச்சேரி கிளை கைதடி கிளை கொடிகாமம் கிளை பூநகரி கிளை பளை கிளை | 18.01.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 18.07.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | சாவகச்சேரி கிளை 2013 ஒக்டோபர் 19ஆம், 20ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |
| அச்சுவேலி | 25.01.2013ற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 25.07.2012ற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் | அச்சுவேலி கிளை 2013 ஒக்டோபர் 26 , 27 திகதிகளில் (சனி, ஞாயிறு) காலை 9.30 மணிக்கு |

(சி/4981)

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி (வடபிராந்தியம்)
வடபிராந்திய காரியாலயம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி இல.
021 222 4683 , 021 222 3126



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து(V)
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா :50.25 செவ் 7
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L Computer Science (பிரான்ஸ் Not PR)
தொ.இ:B2360

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: 30.5
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L கட்டார் (சாரதி)
தொ.இ:B2363

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 09
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ் PR)
தொ.இ:B2366

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா :26.75
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: Bsc Computer Science) (USA Citizen)
தொ.இ:B2367

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி 1
கி.பா :28
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Bsc in Business Com)
தொ.இ:G2364

பிறப்பு: 1986 இந்து(V)
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா :27.75
உயரம்: 167cm
தகைமை/தொழில்: Bsc (Agri) Demo
தொ.இ:G2368

பிறப்பு: 1979 இந்து(KO).
நட்சத்திரம்: ரோகினி 2
கி.பா :124 சூரி,செவ் 8
உயரம்:5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ:G2374

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா :74 செவ்: 8
தகைமை/தொழில்: BBM, MBA Accounting (Canda Citizen)
தொ.இ:G2377

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


# கோட்டமட்ட சிறுவர் அரங்க போட்டி முடிவு

புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கோட்டமட்ட சிறுவர் அரங்கப் போட்டியில் மு/விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இப்போட்டியில் இரண்டாம் இடத்தை மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை மு/ கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டது.வலயமட்ட சிறுவர் அரங்கப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை முல்லைத்தீவு றோ.க.வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (அ-5)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னணி பெறுபேறுகள்-2013

இவ்வாண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை பாடசாலைகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். இதன்படி சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு,

**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**

ச.லாவண்யா- 172, ஞா. கவிசாளினி- 170, வி.பிந்துஜா-170, சா.ஜெசாளினி- 153

**கிளி/விவேகானந்த வித்தியாலயம்**

சிவஞானம் தேனிலவன்- 174, தமிழ்வாணன் தேசிகன்- 162, விக்கினேஸ்வரன் நிறோஜன்- 159, அடைக்கன் கஜேந்தினி- 159, ரவிக்குமார் தமிழ்நிலா-159, சிவாபிரபு இசைப்பிரியா-156

**கிளி/அன்னை சாரதாதேவி வித்தியாலயம்**

திருமுரளி பானுசன்- 178, முருகேஸ் வரன் தூயவன்-161, வடிவேல் சிந்துஜா- 157

**யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்**

ஜெகநாதன் கானழகி- 189, சுசீந்திரக்குமார் மிதுன்ராஜ்-180, இந்திரலிங்கம் விவேகன்-179, விநாயகம் சாகித்தியன் -179, நந்தகுமார் அனுசன்-176, வரதராஜன் மதுசன் 171, கணேசபாலா மிதுர்சன்-163, பிரபாகரன் புவிராஜ்-160, டீன்குமார் அபிதா- 159, பரமசிவம் பவித்திரன் -155.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள மாமிச கடைகளை அகற்ற கோரிக்கை

## மகஜரும் கையளிப்பு

(மல்லாவி)

**வவுனியா குருமன்காடு அம்மன் ஆலயத்திற்கு அருகில் வவுனியா நகரசபையின் கீழ் இயங்கும் மீன்கடைகள் மற்றும் இறைச்சிக் கடைகளை அங்கிருந்து அகற்றும்படி அப்பகுதி மக்களும் அறங்காவலர்களும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர்.**

இந்த மீன் வியாபார நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களினாலும் கழிவு நீரினாலும் ஆலய சூழல் மாசு படுவதுடன் இவ் ஆலயத்தில் இறை வழிபாடு செய்ய முடியாத அவல நிலையும் தோன்றியுள்ளதாக ஆலய பக்தர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் விசனம் தெரிவிக்கின்றனர்.



இது தொடர்பில் தெரியவருவதாவது,

பல வருடங்கள் பழமை வாய்ந்த இவ் ஆலயத்தை வைரவபுளியங்குளம், குருமன்காடு, திருநாமக்குளம், பரப்பன்காடு, பட்டகாடு, வேப்பங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட பல கிராம மக்கள் வழிபாட்டிடமாக கொள்கின்றனர்.

இவ் ஆலயத்திற்கு அண்மையில் புனித செபஸ்ரியார் ஆலயமும் பள்ளிவாசல் ஒன்றும் அமைந்திருக்கின்றது. இத்தகைய ஸ்தலங்கள் அமைந்துள்ள இப்பகுதியில் மாமிச விற்பனை நிலையங்கள் அமைந்திருப்பது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந் நிலையங்களை இவ்விடத்தில் இருந்து அகற்றுமாறு கோரி இப்பகுதி மக்களும் ஆலய அறங்காவலர் சபையினரும், வவுனியா நகரசபைக்கும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகஜர் ஒன்றை முன்னதாகவே கையளித்திருந்த போதிலும் இதுவரை பலன் எதுவும் கிட்டவில்லை.

போரால் பாதிக்கப்பட்டு வன்னியில் இருந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்த பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு அளித்து தஞ்சமளித்த இவ் ஆலயத்தின் குறைகளை நிவர்த்தி செய்ய துறைசார்ந்த அதிகாரிகள் முன் வர வேண்டும் என பக்தர்களும் ஆலய அறங்காவலர் சபையினரும் மீண்டும் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-15)

# கைவினை பொருள் கண்காட்சி

(குருமன்காடு)

மன்னார் வலயக் கல்வி அலுவலகமும் முறைசாராக் கல்விப் பிரிவும் இணைந்து நடத்திய கைவினைப்பொருட்களின் கண்காட்சி நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

மேலும், முறைசாராக் கல்விப் பிரிவினால நடத்தப்பட்ட தொழிற்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சியைப் பூர்த்தி செய்த இளை ஞர், யுவதிகள் உருவாக்கிய பொருட்களே இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன், இந்த தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனும் கௌரவ விருந்தினராக மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் என்.ஏ.துரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-250)

# பட்டப்பகலில் வீடுடைத்து கொள்ளை

(குருமன்காடு)

வவுனியா திருநாவற்குளம் 3ஆம் ஒழுங்கை பகுதியில் கடந்த சனிக்கிழமை பகல் வேளையில் மர்ம நபர்கள் சிலர் பூட்டியிருந்த வீட்டை உடைத்து கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

கடந்த சனிக்கிழமை நண்பகல் வேளை வீட்டின் உரிமையாளர்கள் தாண்டிக்குளம் முருகன் ஆலயத்திற்கு சென்றுள்ளனர்.



இதனை அறிந்த கொள்ளையர்கள் வீட்டின் பின்பக்க கதவை மிக நுட்பமாக உடைத்து உள்ளே சென்றுள்ளனர்.

பின்னர் வீட்டிலிருந்த அலுமாரியை உடைத்து உள்ளிருந்த 25 பவுண் தங்க நகைகளையும் ஒரு இலட்ச ரூபா பணத்தையும் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் பொலிசில் முறையிட்டுள்ளார். வவுனியா பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

# பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் சிரமத்தின் மத்தியில் பயணிக்கும் மக்கள்

(பூநகரி)

கடந்த பத்து நாட்களுக்கு மேலாக யாழ் சாலையில் இருந்து பூநகரி முக்கொம்பன் ஊடாக ஸ்கந்தபுரம் செல்லும் அரச பேருந்துச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் மக்களும் அக்கராயன், முக்கொம்பன் செல்லும் பாடசாலை ஆசிரியர்களும் பெரும் சிரமமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.



பரந்தன் வீதியிலிருந்து முக்கொம்பன் வரை செல்லும் வீதியில் திருத்தவேலை நடைபெறும் இடங்களில் துணை வீதி அமை க்கப்படாமையால் இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

வழமையான இப்பேருந்து சேவை பூநகரி பரந்தன் ஊடாக கிளிநொச்சி வரை தற்காலிக சேவையாக இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

வீதி திருத்தும் பகுதியினர் துணை வீதியை அமைத்து இச்சேவை நடைபெற உதவ வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் (ம-84)




# தென்னங்கன்றுகள் விநியோகம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவை அலுவலர் பிரிவுகள் ரீதியாக கப்புறுக்கா சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அச்சகங்கள் ஊடாக அந்த பிரதேச ம்க்களுக்கு ஆயிரம் தென்னங்கன்றுகள் தென்னை பயிர்ச் செய்கை சபையினரால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இத் தென்னங்கன்றுகள் வழங்கப்படாதுள்ள இடங்களுக்கு விரைவில் தென்னங்கன்றுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.சத்தியேந்திரன் தெரிவித்துள்ளார். (ம-254)

# தபால் சேவை சீரான முறையில் இடம்பெற ஆவன செய்யுங்கள்

(பூநகரி)


பூநகரி தபால் நிலையத்துக்கான தபால் பொதிகளை அனுப்பி வைக்கும் செயற் பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தினால் பூநகரி தபால் நிலைய பகுதிக்கும் அதன்கீழ் இயங்கும் எட்டு உபதபால் நிலைய பகுதிகளுக்கும் மூன்று, நான்கு நாட்கள் தாமதாமாகவே சென்றடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி தெரிய வருவதாவது, கடந்த இருவருட காலமாக யாழ். பிரதம தபால் நிலையத்தில் இருந்து பூநகரிக்கு பஸ் மூலம் அதிகாலையில் தபால் பொதிகள் அனுப்பப்பட்டு வந்தன. இவை காலை எட்டு மணிக்கு முன்னதாகவே பூநகரிக்கு வந்து சேரும் நிலை இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது வடபகுதிக்கு புகையிரதசேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சியில் இருந்து புகையிரதம் மூலம் வரும் பொதிகளை பூநகரிக்கு அனுப்புவதற்கு ஏற்றதான பஸ் சேவை ஒழுங்கு செய்யப்படாமையால் தாமதமாகி வரும் தபால் பொதிகள் அன்றைய தினமே பிரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படாத நிலை இருப்பதால் உபதபால் நிலையப் பகுதிகளுக்கு தபால் சென்றடைவதற்கு நான்கு நாட்கள் வரை தாமதம் ஏற்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இவ்விடயம் பற்றி பூநகரி தபால் நிலைய வட்டாரங்களின் மேலிடத்துக்கு சுட்டிக்காட்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் பற்றி உரிய பகுதியினர் நடவடிக்கை எடுப்பதன் மூலம் பூநகரிக்கு வரும் கடிதங்கள் காலதாமதம் இன்றி உரியவர்களுக்கு சென்றடைய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



காலை வேளையில் தபால் சேவையில் ஈடுபடும் பேருந்து மூலம் புகையிரதத்தில் வரும் பயணிகள் உட்பட அரச அலுவலர்களும் நன்மை அடையும் நிலை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலப்பசளை கிடைக்கவில்லை; விவசாயிகள் ஆதங்கம்

(தனங்கிளப்பு)


தன்ங்கிளப்பு,மறவன்புலோ, கோயிலாங் கண்டி, கைதடி,நாவற்குழி ஆகிய கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளுக்கு இதுவரையில் நிலப்பசளை வழங்கப்பட வில்லையென விவசாயிகள் கவலை வெளி யிட்டுள்ளனர்.

மேற்படி, கமக்கார அமைப்புகளுக்குட் பட்ட விவசாயிகள் கால போகச் செய்கைக் கான நெல்லை விதைத்துள்ள நிலையில் அதற்கான நிலப்பசளை வழங்கப்பட வில்லை.

ஒவ்வொரு வருடமும் இதே நிலை மையே தமக்கு ஏற்படுவதாக இவ் விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலப்பசளை காலம் தாழ்த்தி வழங்கப்படுவதால் போதியவிளைச்சலைத் தாம் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் விவ சாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ-9-37)




# கலாசார விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை

(மல்லாகம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் அனுசர்ணையில் வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையினரால் எங்களின் கதைகள் என் னும் தெருவெளி ஆற்றுகையானது வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தின் பல்வேறு கிராமங்களில் ஆற்றுகை செய்யப் பட்டு வருகின்றது.

இத் தெருவெளி ஆற்றுகையில் நடிகர் களாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் (ஐ.ரி.எம்.) கலைஞர்கள் நடித்துள்ளனர்.

நெறியாள்கையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன், புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் மேற்கொண்டுள்ளார்கள். இசையமைப்பை ஜெகதீசன் மேற்கொண்டுள்ளார். (அ-21)



# பொன்னாலை பிரதேசத்திற்கு பேருந்து சேவை இடம்பெறுவதில்லை

(சித்தன்கேணி)

பொன்னாலை பிரதேசத்துக்கு பேருந்து சேவையை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கிராமம் கடற்படையினரின் கட் டுப்பாட்டின் கீழிருந்து, இவ்வாண்டு விடு விக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீளக் குடியேற்றம் செய் யப்பட்ட இப்பிரதேச மக்களுக்கென அரச பேரு ந்துகளோ, தனியார் பேருந்துகளோ சேவை யில் இதுவரையில் ஈடுபடுத்தப்படவில்லை.

ஆதலால் இல. 782,786 வழித்தடப் பேரு ந்து சேவையைப் பெறுவதற்காக இப்பகுதி மக்கள் பொன்னாலை பகுதியிலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் வரையிலுள்ள மூளாய் சந்திக்கு சென்று அங்கிருந்தே பேருந்து சேவை களைப் பெற்று வருகின்றனர். அல்லாது விடின் அதிக பணத்தை செலவு செய்து ஏனைய தனியார் வாடகை வாகனங்களிலேயே பயணம் செய்ய வேண்டியுள் ளது.

எனவே, பொன்னாலை வரதராஜப் பெரு மாள் ஆலய உற்சவ காலத்தில் மட்டும் சேவை யில் ஈடுபடும் 786, 782 ஆகிய வழித்தட இல க்க பேருந்துகளை உற்சவமல்லாத காலங் களி லும் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்த உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (அ-9-17)

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் சிறுவர் தின போட்டி முடிபுகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் கரவெட்டி கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடை யில் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர் தின போட்டி முடிவுகளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறி வித்துள்ளார்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு,

**கட்டுரை -ஆரம்பப்பிரிவு**

கி.லதுஷன்- (யா/ஞானாசாரியர் கல்லூரி), கே.கேசிகா-(யா/நெல்லியடி மெ.மி.த.க. பாட சாலை), ம.மதுரா- (யா/கரவெட்டி மாணிக்கவாச கர் வித்தியாலயம்).

**கீழ்ப்பிரிவு**

ர. ஆர்த்திகா- (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), உ.நிவேதிகா- (யா/கரணவாய் பொன்னம் பலம் வித்தியாலயம்), ர.சங்கவி- (யா/நெல்லி யடி மத்திய மகாவித்தியாலயம்).

**மத்திய பிரிவு**

ம.மதுமிதன்-(தேவரையாளி இந்துக் கல் லூரி), வ.சங்கீர்த்தனா- (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல் லூரி), சு.சிவப்பிரியா-(யா/வதிரி திருஇருதயக்கல்லூரி).

**மேற்பிரிவு**

த.தனுசிகா-(யா/கரணவாய் மகா வித்தியா லயம்), ஜெ.ஜெயசீலன்-(யா/வதிரி திருஇதயக் கல்லூரி) ச.சகானா- (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) (இருவர் மூன்றாம் இடம்)

**பேச்சு-ஆரம்பப்பிரிவு**

ஸ்ரீபதஞ்சலி-(யா/கரவெட்டி மாணிக்கவா சகர் வித்தியாலயம்), சி.ஸ்வேந்தா-(யா/கரண வாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பா.), வி.கஸ் துரி-(யா/கரணவாய் மகா வித்தியாலயம்).

**கீழ்ப் பிரிவு**

சி.தனுசன்-(யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), தி.மதுசிகா-(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), பே.பவித்திரா-(யா/வதிரி திரு இருதயக்கல்லூரி),

**மத்திய பிரிவு**

ம.சோபிகா -(யா/விக்னேஸ்வரா கல்லூரி), ஆ.றெஜீபா-(யா/வதிரி திருஇருதயக்கல்லூரி) (இருவர் மூன்றாம் இடம்),நி.தர்மினி-(யா/உடுப் பிட்டி மகளிர் கல்லூரி), கி.டர்சிகா -யா/வடம ராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

பா.பாலாஜினி-(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), நி.நிர்த்தனா-(யா/விக்னேஸ்வரா கல் லூரி.),ம.மயூரி-(யா/வதிரி திருஇருதயக்கல்லூரி),

**ஓவியம்**

**ஆரம்பப் பிரிவு**

கை.பிருதுவி-(யா/கரவெட்டி மாணிக்கவாச கர் வித்தியாலம்), யோ.சங்கீதா-(யா/வதிரி திருஇரு தயக் கல்லூரி), கு.கபிலன் -(யா/விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை),

**கீழ்ப்பிரிவு**

த.அபிசன் -(யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்),கு.நிமலராஜ்-(யா/விக்னேஸ் வரா கல்லூரி), உ.உதயராஜ்-(யா/வதிரி திருஇரு தயக் கல்லூரி),

**மத்திய பிரிவு**

இ.சுரக்சனா-(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), பா. நிசாந்தன்-(யா/கரணவாய் மகா வித்தியாலயம்),சி.பிரியேந்திரா-(யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்),

**கவிதை**

**கீழ்ப்பிரிவு**

சி.லக்சிகா-(யா/ஞானாசாரியார் கல்லூரி), பி.கேதாரணி-(யா/நெல்லியடி மத்திய மகாவித் தியாலயம்), வி.தர்சிகா-(யா/கரணவாய் பொன் னம்பலம் வித்தியாலயம்),

**மத்திய பிரிவு**


ஜெ.தாட்சாயிணி-(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), க.சாமந்தி-(யா/தேவரையாளி இந்துக் கல்லூரி), அ.அபிசாயினி-(யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்),

**மேற்பிரிவு**

ம.கிருசாந்தி-(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தே.கலைமகள்-(யா/நெல்லியடி மத் திய மகாவித்தியாலயம்),(இருவர் முதலாமிடம்) ந.காயத்திரி-(யா/கரணவாய் மகா வித்தியா லயம்) (அ-9-60)

# வல்லைவெளியில் புரண்டு வீழ்ந்தது தனியார் பேருந்து

(கரணவாய்)



பருத்தித்துறையிலிருந்து யாழ்ப் பாணம் நோக்கி பயணித்துக் கொண்டி ருந்த 750 வழித்தட இலக்கத் தனியார் பேருந்து வல்லைவெளியில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ். நோக்கி சுமார் 20 பயணிக ளுடன் பயணித்துக் கொண்டிருந்த 750 வழித்தட இலக்க தனியார் பேருந்து வல்லை வெளியிலுள்ள முனியப்பர் கோயிலுக்கு அருகாமையில் தடம் புரண்டு விபத்துக்குள் ளானது.

இதில் பயணித்தவர்களில் சிலருக்கு மட்டும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன சாரதியின் மேல் றேடியற்றரின் சூடான நீர் சிந் தப்பட்டதனால் அவர் காயமடைந்து மந் திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள் ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ-9-60)

# நவராத்திரியை முன்னிட்டு போட்டிகள் நடத்த ஏற்பாடு

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கம் நவராத்திரியை முன்னிட்டு நாவன்மை மற் றும் பண் ணிசைப் போட்டிகளை எதிர் வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் சுதுமலை சிந்மயபாரதி வித்திய சாலையில் நடத்தவுள்ளது.

நாவன்மைப் போட்டிகள் ஆரம்பப் பிரிவு, கீழ்ப் பிரிவு,மத்திய பிரிவு, மேற்பிரிவு அதி மேற் பிரிவு ஆகிய பிரிவுகளில் இடம்பெறவுள்ளன.

ஆரம்பப்பிரிவில் தரம் 1,2,3 மாணவர்கள் சமயம் சார்ந்த யாதேனும் ஒரு தலைப்பில் இயலுமான நேர அளவில் பேசுதல் வேண் டும். கீழ்ப் பிரிவில் தரம் 4,5 மாணவர்கள் மழலைகளிடம் இறை உணர்வு வளர்க்கும் சக்திவழிபாடு எனும் தலைப்பில் 3 நிமிடங்களும் மத்திய பிரிவில் தரம் 6,7, 8 மாணவர்கள் சக்தி வழிபாடும் சமூகமும் என்னும் தலைப்பில் 5 நிமிடங்களும் மேற்பிரிவில் தரம் 9,10,11 மாணவர்கள் இந்துவாகவே வாழ் வதற்கு நவராத்திரி என்னும் தலைப்பில் 8 நிமிடங்களும் பேசுதல் வேண்டும். அதிமேற்பிரி வில் 12,13 மாணவர்கள் போட்டி ஆரம்பிப்பதற்கு 15 நிமிடங்கள் முன் பதாக வழங் கப்படும் சமயம் பரப்பிலுள்ள தலைப்பில் 10 நிமிடங்கள் பேசுதல் வேண்டும்.

பண்ணிசைப் போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு என்னும் பிரிவுகள் அடிப்படையில் நடைபெற வுள்ளன.

எனவே, பண்ணிசை சம்பந்தமான விபரங்களையும் போட்டிகள் சம்பந்தமான மேலதிக விபரங்களையும் 0771641413 என் னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என போட்டி களின் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள் ளனர். (அ-9-23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துரதிர்ஷ்ட மனிதன்

ஒருமுறை அக்பர், ஆக்ராவில் இருந்த துரதிர்ஷ்டமான ஒரு மனிதனைப் பற்றி கேள்விப்பட்டார்.

"இது உண்மையா?" அவர் பீர்பாலைக் கேட்டார்.



"பாதுஷாவே! அம்மனிதனின் முகத்தை முதலில் பார்த்தால், அவர்களுக்கு ஏதேனும் கெடுதல் நேருகிறது என மக்கள் கூறுகின்றனர் என்றார் பீர்பால்.

"எனக்கு அம்மனிதனைக் காண வேண்டும். அதனால் அவனை இங்கு அழைத்து வரவும்" என்றார் அக்பர்.

சிறிது நாட்கள் சென்றன. ஒரு நாள் பீர்பால் ஒரு மனிதனைக் தன்னுடன் அழைத்து வந்தார்.

அக்பர் அம்மனிதனின் முகத்திலேயே முதலாவதாக விழித்தார்.

அன்று முழுவதும் அக்பர் மிகுந்த வேலைப் பளுவுடன் இருந்தார். அதனால் அவருடைய உணவு உண்ணும் நேரம் கடந்து சென்றதால் பசி மேலிட்டு கோபத்துடன் காணப்பட்டார்.

அப்பொழுது அவர் முதன் முதலாகக் கண்டது அந்த அதிர்ஷ்டமற்ற மனிதனை என்பதை நினைவு கூர்ந்தார்.


"நீ கூறியது சரியே பீர்பால்! அம்மனிதன் மிகவும் துரதிர்ஷ்டம் வாய்ந்தவனாக உள்ளான். நான் அவனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன் என்றார்" அக்பர்.

இதனைக் கேட்ட பீர்பால் சிரிக்க ஆரம்பித்தார்.

"பாதுஷாவே! நீங்கள் அம்மனிதனின் முகத்தில் முதலாவதாக விழித்தால், தாங்கள் உணவு உண்ணாமல் போக நேர்ந்தது எனக் கூறினீர்கள்.

ஆனால், அவன் நிலையை நினைத்துப் பார்த்தீர்களா! அம்மனிதனின் தங்களது முகத்தில் முதலாவதாக விழித்து இப்போது மரணத்தை நோக்கி இருக்கிறான். இப்பொழுது சொல்லுங்கள். யார் துரதிர்ஷ்டம் வாய்ந்த மனிதன்" என்று பீர்பால் கேட்டார்.

"என்னை மன்னித்துவிடு! பீர்பால்! தவறான தீர்ப்பு கூறியதிலிருந்து என்னை காப்பாற்றியுள்ளாய் என்று சொன்னார் அக்பர்.



*** *** *** ***

## 10.2013 03 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ 301 - உலகின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்றும், உலகின் மிகவும் பழமையான குடியரசுமான சான்மரீனோ புனித மரீனசினால் உருவாக்கப்பட்டது.

❖ 1260 - பாலஸ்தீனத்தில் மங்கோலியர்களுடன் இடம்பெற்ற போரில் மாம்லுக்குகள் வெற்றி பெற்றனர். இதுவே மங்கோலியப் பேரரசு அடைந்த முதலாவது தோல்வியாகும்.

❖ 1783 - அமெரிக்கப் புரட்சி போர் முடிவுக்கு வந்தது. பாரிசில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது. ஐக்கிய அமெரிக்கா பிரித்தானியாவிடம் இருந்து அதிகாரபூர்வமாக விடுதலை அடைந்தது.

❖ 1801 - இலங்கையில் நெல், மற்றும் தானிய வகைகளுக்கு வரி செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ 1855 - நெப்ராஸ்காவில் அமெரிக்கப்படையினர் சியூ பழங்குடியினரைத் தாக்கி பெண்கள் குழந்தைகள் உட்பட 100 பேரைக் கொன்றனர்.

❖ 1914 - அல்பேனிய இளவரசன் வில்லியம் பலத்த எதிர்ப்பை அடுத்த ஆறுமாத ஆட்சியின் பின்னர் நாட்டை விட்டு வெளியேறினான்.

❖ 1933 - சோவியத் ஒன்றியத்தின் அதி உயர் புள்ளியான பொதுவுடமை முனையை (7495 மீ) யெவ்கோனி அப்லாசுகொவ் எட்டினார்.

❖ 1939 - இரண்டாம் உலகப்போர்: போலந்து மீதான ஜேர்மனியின் முற்றுகையை அடுத்து பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியன ஜேர்மனி மீது போர் தொடுத்தன.

❖ 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியை முதல் தடவையாக நேசநாடுகள் முற்றுகையிட்டன.

❖ 1971 - கட்டார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

❖ 1976 - நாசாவின் வைக்கிங் 2 விண்கலம் செவ்வாயக் கோளில் இறங்கி செவ்வாயின் மிகக் கிட்டவான வண்ணப் படங்களை பூமிக்கு அனுப்பியது.

❖ 2004 - ரஷ்யாவில் பெஸ்லான் பாடசாலைப் படுகொலைகள் முடிவுக்கு வந்தது. மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 344 பேர் கெல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

❖ 1814 - ஜேம் சில்வெஸ்டர், பிரித்தானிய கணிதவியலாளர்.

❖ 1829 - அடோல்ஃப் ஃபிக் ஜேர்மனிய கண்டுபிடிப்பாளர். (இ.1901)

❖ 1948 - [illegible] (இ. 2008)

### ஜேம்ஸ்சில்வெஸ்டர்



லண்டனில்யூதகுடும்பத்தில்பிறந்த இவர்14-வது வயதில் ஓர் அரையாண்டு லண்டன் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் டிமார்கனிடம்தான் பயின்றார். 1829 இல் 15- ஆவது வயதில் லிவர்பூலில் உள்ள ராயல் இன்ஸ்டிடியூஷனில் இரண்டாண்டுகள் படித்தார். ஓராண்டிலேயே அங்கு கணிதத்தில் பரிசு பெற்றார்.

1831 இலிருந்து கேம்பிரிட்ஜில் சென் ஜான்ஸ் கல்லூரியில் படித்த ஸில்வெஸ்டருக்கு அவர் ஆங்கிலத் திருச்சபையின் சபதங்களை ஏற்க மறுத்ததால் அவருக்கு கிடைக்க வேண்டிய பல்கலைக்கழகப் பட்டங்கள் கொடுக்கப்படவில்லை. இப்பட்டங்கள் டப்ளினிலுள்ள ட்ரினிடி கல்லூரியிடமிருந்து பெற்றார். 1871 இல், ஆங்கிலக் கல்வி நிலையங்கள் மதக்கோயில்களின் பிடியிலிருந்து விலகினதும், அவருக்குச் சேரவேண்டிய பட்டங்கள் கௌரவப் பட்டங்களாக அளிக்கப்பட்டன.

கிரேக்க மொழியிலும், இலத்தீன் மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்த ஸில்வெஸ்டர் பிரெஞ்சு, ஜேர்மனிய, இத்தாலிய இலக்கியங்களுடன் அவருக்கிருந்த அறிவுத் தொடர்பினால், கணிதத்தில் மாற்றமுறாமைக் கோட்பாட்டில் இன்று வழக்கத்திலுள்ள பல அருமையான கலைச் சொற்கள் இவருடைய படைப்புகளே.

24-வது வயதில், லண்டினிலுள்ள யூனிவர்சிடி காலேஜ் இல் ஸில்வெஸ்டர் அறிவியல் பேராசிரியராக இரண்டாண்டுகள் பணியாற்றிய போது Fellow of the Royal Societyயாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகவரலாற்றில் நிரந்தரமாக இடம்பெற்ற ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் இவரது மாணவர் ஆவ்ார். 32-வது வயதில் 1850 இல் வழக்கறிஞர் ஆனார். அங்கு கெய்லியைச் சந்தித்து அவருடன் அலசிய கணித ஆய்வுகள் தாம் இன்று மாற்றமுறாமைக் கோட்பாடு என வழங்கப்படுகிறது. அணிக்கோவைகள், அணிகள், இருபடிய அமைப்புகளின் ஆழமான கருத்துகளில் பல இவ்விருவரின் கூட்டினால் உதித்தவையே.

1878 இல் "American Journal of Mathematics என்ற ஆய்வுசஞ்சிகை ஸில்வெஸ்டரால் தொடங்கப்பட்டு ஜான்ஸ் ஹப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் வைக்கப்பட்டது. கணித உலகில் இன்றும் அச்சஞ்சிகை ஓங்கி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை சித்தர் இராஜ் குமார் அவர்களின் பிரம்மரிஷி மலை வாசம்



ஆன்மீகம் 132

எல்லாம் வல்ல எம்பெருமான் பகவான் ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டர் அருளால் 1980 முதல் பிரம்மரிஷி மலைக்கு வரக்கூடிய மாபெரும் பாக்கியம் கிடைக்க என்ன தவம் செய்தேனோ! பூர்வீகத்தின் விட்டகுறை தொட்டகுறையோ என்று எண்ணும் காலத்தில் இப்பிறவி எடுத்த பலாபலன் பிரம்மரிஷி மலையில் கால் வைத்ததுமே உணரப்பெற்றேன்.

ஒருமுறை சித்தர் பெருமானுடன் பிரம்மரிஷி மலை கார்த்திகை தீபம் ஏற்ற மாலை 4 மணிக்கு ஆச்சிரமத்திலிருந்து குறுக்கு வழியாக நடந்தே, பிரம்மரிஷி மலை அடிவாரத்திலுள்ள குண்டு பாறையின் கீழே சித்தர் அமர்ந்து தியானம் செய்யும்போது அடியேனும் உடன் வந்து பத்து பேர்களும் ஊதுபத்தி, தேங்காய் உடைத்து விளக்கேற்றி சாமி கும்பிட்டு மலைக்கு மேலே சென்றோம்.

அங்கே ஒரு கல் தூண் இருந்தது. அதன் அருகில் விளக்கு ஏற்றும் கம்பமும், கொங்கண கருப்புசாமி சிலையும் இருந்தது. அதற்கு அபிஷேக பூஜையெல்லாம் செய்துவிட்டு சித்தர் அருகில் ஒரு டப்பாவில் இருந்து மூன்று லீட்டர் எண்ணெய ஊற்றி அவர் கையில் ஜோதி ஏற்றினார். கொண்டு சென்ற இனிப்பு வகைகளை படைத்துவிட்டு வந்தவர்களுக்கு கொடுத்தோம்.

சிறிது நேரம் கழித்து சித்தரிடம்



பிரம்மரிஷிமலையில் அன்னை சித் தர் ராஜ்குமார் குருஜி, மாதாஜி ரோகிணி ராஜ்குமார் மற்றும் அவர்களின் மகன்கள்

அமைதியாக உட்கார்ந்து சாமி இந்த மலையென்ன பெரிய விஷேஷம் என்றேன்.

ராஜா இதுதான் பிரம்மரிஷி மலையாகும். இது பஞ்ச பாண்டவர்கள் தவம் செய்த இடம். திரௌபதி பிறந்த இடம்.

உலகத்தின் அநேகமான ரிஷி, முனிவர், சித்தர்கள் வாசம் செய்தாலும் அவர்கள் எல்லாம் வந்து அருள் பெறக் கூடிய ஒரேமலை, ரிஷிகளுக்கென்றே உள்ள இந்த பிரம்மரிஷி மலையாகும் என்றார். அது மட்டுமன்றி இங்கு நாம் தீபஜோதி ஏற்றியதும் சூட்சுமத்தில் அநேக சித்தர்கள் இந்த நேரத்தில் இவ்விடம் வந்து பிறகு திரு அண்ணா மலைக்கு செல்கிறார்கள் என்றார்.

சித்தர் பெருமான் பிரம்மரிஷி மலையில் கார்த்திகை தீப ஜோதி ஏற்றியவுடன் இரவு 9 மணிக்கு திரு அண்ணா மலைக்கு பக்தர்களுடன் வண்டியில் செல்வார்கள். இரவு 2 மணிக்கு திரு அண்ணாமலையை அடைவோம். அவ்விடம் ஜோதி தரிசனத்தைக் கண்டு களித்து ஏதாவது ஒரு இடத்தில் சிறிது உறங்குவோம். காலையில் கோயிலுக்கு போகிறவர்கள் கோயிலுக்கு சென்று வாருங்கள் என்று கூறி சித்தர் ச்சாதுக்கள் மடம் சென்று அங்கு யாராவது வருகிறார்களா என்று பார்த்து பிறகு நடந்து வருவார்கள். அடியேன் சித்தரிடம் சாமி எங்கே போனீர்கள்? என்பேன். இப்பவும் பெரியவங்க யாராவது வந்தார்களா என்று சாதுமடம் சென்று பார்த்தால் இந்த வருடமும் வரவில்லை சரி என்ன செய்வது என்று சிறிது வருத்தத்துடன் இருந்தார்.

யார் சாமி என்றேன்?

நான்கு பேர் இங்கு வரவேண்டும். அவர்கள் வந்தால் சீக்கிரம் நாட்டின் அவல நிலை மாறிவிடும்.

ஆனால், வரவில்லை. சரி என்று வருத்தத்துடன் பெரம்பலூர் புறப்பட்டு வந்துவிட்டார்.

யார் அந்த நான்கு சித்தர்கள் என்றேன்.

(தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# தமிழக அரசியல் களம் சந்திக்கும் நேரடிப் போட்டி



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திறக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும் நேரடிப் போட்டி தொடங்கியிருக்கிறது. தமிழகத்தில் தங்கள் கட்சியின் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்படும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் பா.ஜ.க. சார்பில் அக்கட்சியின் பிரதமர் வேட்பாளராகப் பவனி வரும் குஜராத் முதல்வர் நரேந்திரமோடிக்குமே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று கூறிவிடலாம். அந்த அளவிற்கு அரசியலில் நட்பாக இருந்த இரு தலைவர்களும் இன்று எதிர் எதிர் முகாம்களில் நிற்க வேண்டிய சூழல் உருவாகி வருகிறது. நண்பர்கள் அரசியலில் எதிரிகளாகிவிடுவது இப்படித்தான் என்று நினைக்கும் அளவிக்கு நரேந்திரமோடிக்கும் ஜெயலலிதாவிற்கும் மௌன யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

சமீபத்தில் திருச்சிக்கு வந்தார் பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி. அவர் இளந்தாமரை பொதுக்கூட்டத்தில் பேசினார். அக்கூட்டத்திற்கு போதிய பொலிஸ் பாதுகாப்புகளைக் கொடுத்தது தமிழக அரசு. மோடியின் பேச்சு அன்றைய தினம் தமிழகத்தில் உள்ள 16 வயது இளைஞரிலிருந்து 60 வயது முதியவரையும் கவர்ந்திழுக்கும் வகையில் அமைந்தது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் இளைஞர்கள். தமிழக பா.ஜ.க. இப்படியொரு கூட்டத்தைப் பார்த்ததில்லை என்றே கூற வேண்டும். அவ்வளவு பெரிய கூட்டம் திருச்சியில் பா.ஜ.க. விற்காகக் கூடியிருந்ததைப் பார்த்த அரசியல் கட்சிகள் அனைத் துமே மிரண்டு போயிருக்கின்றன. குறிப்பாக ம.தி.மு.க. பொதுச்செயலா ளர் வைகோ போன்றவர்கள், இவரு க்கு என்ன மாதிரி இளைஞர்கள் கூட்டம் இருக்கிறது. எப்படிப் பேசுகிறார் மோடி என்றே வியந்து போனார்கள். இத்தனைக்கும் இந்தியில் மோடி பேச, அந்தப்பேச்சை தமிழக பா.ஜ.க.வின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான எச்.ராஜா மொழி பெயர்த்தார். இன்னும் மோடி போன்றவர்கள் முழுவதும் தமிழில் பேசியிருந்தால், தமிழகமே ஆர்ப்பரித்திருக்கும் என்று பல அரசியல் கட்சித் தலைவர்களும் கூறுகிறார்கள்.

இந்த பிரமாண்டமான மோடி கூட்டத்தை அனைத்து டி.வி. சேனல்களும் நேரடி ஔபரப்புச் செய்தன. குறிப்பாக விஜயகாந்த் நடத்தும் டி.வி.யில் மோடியின் பேச்சை திருப்பித் திருப்பிப் போட்டுக்கொண்டிருந்தனர். [illegible] டி.வியில் [illegible] செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. இன்னும் சொல்லப்போனால், மோடியின் பேச்சை பின்னணியாக வைத்து ஒரு விவாதமே நடத்தப்பட்டது. ஆனால், தமிழக டி.வி. சேனல்களில் மோடியின் வருகையையோ, அவரது நிகழ்ச்சியையோ, அவரது பேச்சையோ கண்டுகொள்ளாமல் இருந்தது ஒரேயொரு டி.வி. தான். இது அ.தி.மு.க.வின் அதிகாரப் பூர்வமான டி.வியான ஜெயா டி.வி. இதுதவிர அனைத்து டி.வி சேனல்களிலுமே நரேந்திரமோடியின் தமிழக சுற்றுப்பயண நிகழ்ச்சிக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல, நரேந்திரமோடியின் வருகைக்கு முன்பு பிரபல துக்ளக் பத்திரிகை ஆசிரியர் சோ தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்தார். நரேந்திரமோடியின் வருகை குறித்தும் பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி வைப்பது பற்றியும் பேசியிருக்க வேண்டும் என்பதே உள்வட்டாரச் செய்தி. ஆனால், அந்த சந்திப்பிற்குப் பின்னர் ம.தி.மு.கவுடன் கூட்டணி பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம் என்று பா.ஜ.க. முக்கிய தலைவர்களில் ஒருவரான இல.கணேசன் ஆங்கிலப் பத்திரிகையான டைம்ஸ் ஒவ் இந்தியாவிற்கு பேட்டியளித்தார். அதில் தமிழக முதலமைச்சரை பிரதமர் வேட்பாளராக அ.தி.மு.க.வினர் முன்னிறுத்திவிட்டார்கள். அதனால் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியில் தேர்தலுக்கு முன் இடம் பெறுவதற்கு சாத்தியமில்லை என்று அறிவித்தார். வெளிப்படையாகவே இப்படிச்சொன்ன இல.கணேசன், தே.மு.தி.க.மற்றும் ம.தி.மு.க போன்ற [illegible] சில நண்பர்கள் கூட்டணி [illegible] பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். இந்தப் பேட்டி அ.தி.மு.கவிற்கும் பா.ஜ.க.விற்கும் தேர்தலுக்கு முன்பு கூட்டணி இல்லை என்பதை நரேந்திரமோடியின் வருகைக்கு முன்பே தமிழக வாக்காளர்களுக்கு அறிவித்தது.

இந்நிலையில் நரேந்திரமோடி திருச்சிக்கு வந்தார். அக்கூட்டத்தில் பேசினார். பக்கத்து மாநிலமான ஆந்திராவில் உள்ள ஹைதராபாத்திற்கு வந்த போது தமிழக அரசின் நிர்வாகம் சிறப்பாக நடக்கிறது. அந்த மாநிலத்தில் நடக்கும் நிர்வாகத்தைப் பார்த்து மற்ற மாநிலங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற தொணியில் பேசினார். இதற்கு ஆந்திர முதல்வர் கிரண் குமார் ரெட்டி கூட கடும் கண்டனம் தெரிவித்து அறிக்கை விட்டார். ஆனால், தமிழகத்திற்கு வந்த நரேந்திரமோடி அ.தி.மு.க அரசை பாராட்டவில்லை. தமிழக முதல்வரின் நிர்வாகச் சிறப்பு பற்றியும் பேசவில்லை. பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்ற முடிவை அ.தி.மு.க எடுத்துவிட்டது என்பதை உணர்ந்த நரேந்திரமோடி பாராட்டு வழங்கவில்லை. அதே நேரத்தில் ஏற்கனவே ஆந்திர மாநிலத்தில் அ.தி.மு.க. அரசை பாராட்டிப் பேசிவிட்டதால் தமிழக கூட்டத்தில் அ.தி.மு.க. அரசை விமர்சித்தும் பேச முடியவில்லை.

அதனால் பொதுவாக பாகிஸ்தான், இலங்கை தமிழர் பிரச்சினை போன்றவற்றைப் பேசிவிட்டு அவரது வழக்கமான காங்கிரஸ் அட்டாக்கைத் தொடுத்து விட்டுக் கிளம்பிச் சென்றார். குறிப்பாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவதைத் தொட்டுப் பேசினார்.

எம்.காசிநாதன் (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச, தனியார் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரியுங்கள்

## 17 தொழிற்சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

**அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. 2014 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திற்கு முன்வைத்துள்ள 21 முன்மொழிவுகளில் ஒன்றாக இதனையும் இணைக்குமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவாகவும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்தை 5 ஆயிரம் ரூபாவாகவும் உயர்த்த வேண்டுமெனும் கோரிக்கையை இரண்டாவது தடவையாகவும் தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ளன.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுக்கும் ஸ்தம்பித்துள்ள வருமானங்களுக்கும் இடையில் உள்ள பாரிய இடைவெளியை அரசாங்கம் கவனிக்க தவறியுள்ளது என 17 பாரிய தொழிற்சங்கங்களை அடக்கிய தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பின் இணைப்புக் குழு கூறியுள்ளது.

அரசாங்கம் தேர்தல்களில் வெற்றி பெற்றாலும் வரவு செலவு திட்டத்தில் சம்பள பிரச்சினையை தீர்க்கத் தவறுமாயின் அது மக்களின் மிக முக்கியமான கோரிக்கையை நிறைவேற்ற தவறியதாகும் என ஜாதிக்க சேவக சங்கத்தின் ஏற்பாட்டாளரான சுனில் டி சில்வா கூறினார்.

உண்மையில் சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும். ஆயினும் நாட்டின் ஸ்திரமற்ற பொருளாதார நிலையை கருதி கடந்த வருட கோரிக்கையோடு நிற்கவுள்ளதாக அவர் கூறினார்.

வாழ்க்கைச் செலவு சுட்டெண் 280 ஆகியுள்ளது. இதனை தாமதமின்றி வர்த்தமானியில் அறிவிக்க வேண்டுமென தொழிற்சங்க கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் கேட்டுள்ளதெனவும் அவர் கூறினார். (அ-2)

# சிவ தீபம் மலர் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை யா/வல்வை சிவகுரு வித்தியாசாலையின் சிவ தீபம் மலர் -01 வெளியீடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை தையல் பாகர் மண்படத்தில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது யாழ்.பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங் கராஜா வெளியீட்டுரையை நிகழ்த்த பழைய மாணவர் சங்கத் தலைவர் வி.கவிச்செல்வன் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

நூலின் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் ஆற்றவுள்ளார். (அ-7)

# நாடுகடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் இருநாள் மாநாடு



(கொழும்பு)

இலங்கைத்தீவில் தமிழினத்தின் மீது நடந்தேறும் இனப்படு கொலைக்கு பொறுப்புக்கூற வைக்கும் பொருட்டு பிரித்தானிய மண்ணில் இடம்பெற்றிருந்த மாநாடு பதினாறு தீர்மானங்களுடன் நிறைவு பெற்றுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 28,29 ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்த இருநாள் மாநாட்டில் தமிழர், தமிழரல்லாதோர் என பல வேறு துறைசார் வள அறிஞர்கள் பங்கெடுத்திருந்தனர்.

இனப் படுகொலைக்கான பொறுப்புக்கூறலை கருத்துருவாக்க ரீதியாக வலியுறுத்துவதானது, பரிகார ரீதியாக சுயநிர்ணய உரிமையினை கோருவதற்கு ஈழத்தமிழினம் உரித்துடையவர்கள் என்ற நிலைப்பாட்டை இந்த மாநாடு பறைசாற்றுகின்றது.

இருநாள் அமர்விலும் ஆய்வுரைகள் பலவும் முன்வைக்கப்பட்டிருந்ததோடு, பல்வேறு தலைப்புகளிலும் விவாதங்கள் இடம்பெற்றிருந்தன. அத்தோடு தமிழர்தாயகத்தை மையப்படுத்திய புள்ளி விபரத் தரவுகள் காட்சிப்படுத்தல்களும் இடம் பெற்றிருந்தன. (அ-2)

# இலங்கை பணியாட்களை எதிர்பார்க்கிறது தாய்வான்

தாய்வான் அரசாங்கம் இலங்கையருக்குபணியாளர்களாக வேலை வாய்ப்பு வழங்க எதிர்பார்ப்பதாக தசைனா போஸ்ட் எனும் செய்தி தாளினை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் அடிப்படையில் தாய்வானின் நிறுவனங்கள் அடுத்த ஆண்டில் இலங்கையில் இருந்து பணியாளர்களை எதிர்பார்ப்பதாக அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கு இரண்டு நாடுகளுக்குமிடையிலான விசா உட்பட பல தடைகள் நிவர்த்தி செய்யப்படவுள்ளதாகவும் அந்த செய்தித் தாள் குறிப்பிட்டுள்ளது.

தாய்வானில் தற்போது பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகளின் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந் நிலையில் 4 இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்களுக்கு தாய்வானில் வேலைவாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்தை சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கேட்டுள்ளார். (அ)

# தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை வரைபு வெளியீடு

(கொழும்பு)

தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கைக்கான நகல் வரைவு உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நெளும் பொக்குண மஹிந்த ராஜபக்ஷஅரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய நிகழ்வின் போதே இது வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தலைமையில் நடைபெற்ற உலக சிறுவர் தின பிரதான நிகழ்வில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கைக்கான நகல் வரைபு அதன் தலைவி அனோமா திஸாநாயக்கவினால் ஜனாதிபதியின் பாரியார், அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளரிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

43 பக்கங்களைக் கொண்ட இந்த நகல் வரைவில், சிறுவர்களுக்கான பாதுகாப்பு, வழிகாட்டல்கள், நலன்கள், சிறுவர்களும் குடும்பமும், சிறுவர்-பெற்றோர் உறவுகள், உரிமைகளும் கட்டுப்பாடும், புனர்வாழ்வு ஆலோசனை, கல்வி ஆக்கத்திறன், வன்முறைகளிலிருந்து பாதுகாத்தல், சிறுவர்களுக்கு அனுகூலமான சட்ட நடைமுறை, சிறுவர் மீது தவறு இழைப்போர் தொடர்பான பதிவு, சிறுவர்களை தத்தெடுத்தல், அரவணைத்தல், சிறுவர் நலன்புரி நிலையங்கள், கண்காணித்தல், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கூட்டு பொறுப்பு, பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்கையின் நகல் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (அ-2)

# எனது அம்மாவை மீட்டுத்தாருங்கள்; ஏழு வயதுச் சிறுவன் மன்றாட்டம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில்புரியச் சென்றிருந்த தனது தாயை மீட்டுத்தருமாறு 7 வயது சிறுவனொருவன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு வாரியத்திடம் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்துள்ளான்.

அம்பாறை பெரிய நீலாவணையில் வசிக்கும் குறித்த சிறுவன் தன்னை பராமரித்துவரும் பாட்டியுடன் சென்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு வாரியத்தின் கல்முனை பிராந்திய அலுவலக பொறுப்பதிகாரியிடம் இது தொடர்பான எழுத்து மூல மனுவொன்றையும் கையளித்துள்ளான்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி தனது தாயார் சவுதி அரேபியாவிலுள்ள வீடொன்றில் வேலை செய்ய பணிப் பெண்ணாகச் சென்றிருந்ததாகவும் அங்கு சென்ற பின்னர் அவர் இரு வருடங்களாக தம்முடன் தொடர்பிலிருந்த போதும் தற்போது ஒரு வருடத்திற்கும் மேலாக தாயாரின் தொடர்புகள் எதுவும் இல்லை என்றும் அச்சிறுவன் தெரிவித்துள்ளான். (அ-2)

# புத்தளத்தில் மீட்கப்பட்ட வாக்கு சீட்டுக்கள் எண்ணப்பட்டவை

(கொழும்பு)

புத்தளம் புனித அன்ரூ வித்தியாலயத்தில் இருந்து மீட்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டவை என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய தெரிவித்ததை அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

குறித்த சம்பவம் பற்றி தெளிவுபடுத்தும் ஒன்றுகூடல் நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணையாளருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்றது.

இதன்போது தேர்தல்கள் ஆணையாளர் கட்சியின் பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளித்திருந்தார்.

அதன்போது அவர் கூறுகையில்,

எதிர்காலத்தில் வாக்கெண்ணும் பணிகளில் இருந்து விருப்பு வாக்குகள் எண்ணப்படுவது வரையிலான சகல செயற்பாடுகள் பற்றியும் மக்கள் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்த தீர்மானித்துள்ளோம் என்றார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் சட்ட அதிகாரி சுனில் வட்டகல,

புத்தளம் வாக்குச் சீட்டு குறித்த மேலதிக நடவடிக்கைகள் விசாரணை மட்டத்தில் இருப்பதாக தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை. தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பு இணைந்திருந்தது.

இதன்போது கருத்து வெளியிட்ட கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்,

மீட்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்பட்டவை எனவும் கணக்கிடப்பட்டவை எனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை ஒழித்தமைக்கான கௌரவம் இலங்கைக்கு கிடைக்கவில்லை

## அமைச்சர் பீரிஸ் கவலை



(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழித்தமைக்கான கௌரவம் இலங்கைக்கு கிடைக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் படையினர் மேற்கொண்டதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் காத்திரமான விசாரணைப் பொறிமுறையை உருவாக்கியுள்ளது. அதாவது கடத்தல், காணாமற் போதல்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆணைக்குழு ஒன்றை அமைத்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பாவி தமிழ் மக்களை மனித கேடயமாக பயன்படுத்திக் கொண்டதாக தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர்கள் யுத்தத்தை இடைநிறுத்துமாறு கோரியிருந்த போதிலும் ஜனாதிபதி அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

அந்த சந்தர்ப்பத்தில் யுத்தத்தை இடைநிறுத்தியிருந்தால் இன்னமும் யுத்தம் நீடித்திருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை உரிய அங்கீகாரத்தை வழங்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 10 ஆயிரத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்தாண்டில் செப்டெம்பர் இறுதியளவில் 35 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர்.

அதேவேளை இவ்வருடத்தில் செப்டெம்பர் இறுதியளவில் 24 ஆயிரத்து 384 நோயாளர்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் செயலர் டாக்டர் நிஹால் ஜயதிலக தலைமையில் அமைச்சர் மட்டக் குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதன்போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஒக்டோபர் 07 முதல் 13 ஆம் திகதி வரை அமுலாக்கப்படவுள்ள தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தின் வெற்றிக்காக அமைச்சுக்கள் மட்டக் குழுவை அழைத்து ஒத்துழைப்பைப் பெறுமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

அதன்பேரில் இக் கூட்டம் நடைபெற்றது. கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் 80 பேர் டெங்கினால் மரணித்தனர். இவ்வாண்டு 64 பேர் மட்டுமே மரணித்துள்ளனர்.

இவ்வாண்டில் 47 வீதமான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். வீசப்படும் கழிவுப் பொருட்கள் மூலமே டெங்கு நுளம்புகள் பெருகுகின்றன.

இவற்றை அகற்றுவதன் மூலம் டெங்கை ஒழிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

# இலங்கையுடன் நெருங்கிய உறவுகள் பேணப்படும்

## ஜேர்மனிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடன் நெருங்கிய உறவுகள் பேணப்படும் என ஜேர்மனி அறிவித்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு அறுபது ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில், இலங்கைக்கான ஜேர்மனிய தூதுவர் ஜேர்கன் மொர்ஹார்ட் தெரிவித்துள்ளார். இராஜதந்திர உறவுகளை விடவும் மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுகள் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனினும் அண்மையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக ஜேர்மனி கடும் விமர்சனத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது அவரை அவமானப்படுத்தியமைக்கு ஜேர்மனி அதிருப்தி வெளியிட்டிருந்தது.

எவ்வாறெனினும் இரு நாடுகளுக்கும் இடையில் சிறந்த உறவுகள் காணப்படுவதாகவும் இந்த உறவுகள் தொடர்ந்தும் நீடிக்கும் எனவும் ஜேர்மனிய தூதுவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜனநாயக மக்கள் முன்னணிக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கும்

## சிறிதரன் எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு உட்பட்ட மேல்மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன், ஊடகச் செயலாளர் பாஸ்கரா உட்பட பலரின் ஆதரவுடன் வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் பிரசார பணிகளை மேற்கொண்டிருந்தது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் நாம் மலையகம் சார் பிரதிநிதியை நியமிக்காத சந்தர்ப்பத்திலும் எமக்காக மூலை முடுக்கெல்லாம் தலைவர் மனோகணேசனும் ஊடகச் செயலாளர் பாஸ்கராவும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர். எங்கள் பெருவெற்றிக்கு அவர்களும் பெரும் பங்காற்றினார்கள்.

நடைபெற இருக்கும் கொழும்பு உட்பட மேல்மாகாண சபைத் தேர்தலில் தனித்து களம் இறங்கவுள்ள ஜனநாயக மக்கள் முன்னணிக்கு முழுமையான ஆதரவை அளிப்பது எமது தார்மீக கடமையாகும்.

தமிழ் மக்கள் அழிக்கப்படும் காலங்களில் எல்லாம் கொழும்பில் இருந்து எமக்காக குரல் கொடுத்த தலைவர் மனோகணேச னுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் கொழும்பு உட்பட மேல் மாகாண தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவை நிச்சயமாக வழங்குவார்கள் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு.

மேலும் தமது முற்றுமுழுதான ஆதரவு ஜனநாயக மக்கள் முன்னணிக்கு என்றும் உண்டு எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார். (அ-2)

# மாகாண சபைகள் காணி, பொலிஸ் அதிகாரங்களை கோரலாம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரினாலும் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கோரும் உரிமை மாகாண சபைகளுக்கு காணப்படுகின்றது.

எனினும் அதனை வழங்குவது குறித்த பொறுப்பு வாய்ந்த தீர்மானத்தை எடுக்கும் கடமை அரசாங்கத்தைச் சாரும்.

மேல் மாகாண சபையின் முதலமைச்சராக சந்திரிகா பண்டாரநாயக்க கடமையாற்றிய காலத்தில் காணி பொலிஸ் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனினும் இந்தத் தீர்மானம் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. அதிகாரங்களைக் கோருவதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்புஅரசாங்கத்துடன்இணைந்துசெயற்பட்டு நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(அ-2)

# இலங்கையர் ஒருவர் கம்போடியாவில் கைது

(கொழும்பு)

கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங் கையர் ஒருவர் கம்போடியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு இலங்கையர் ஒருவரும் மலேசியர் ஒருவரும் 50 ஆயிரம் டொலர் மோசடியில் ஈடுபட்டதாக தெரிவிக் கப்படுகின்றது. 30 மற்றும் 34 வயதினையு டைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளனர்.

போலியான கடனட்டைகள் மற்றும் ஏ.ரீ. எம். அட்டைகளைப் பயன்படுத்தி மோசடி செய்துள்ளதாக அவர்கள் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

மலேசிய பிரஜையின் கடன் அட்டையைப் பயன்படுத்தி தாம் பணம் பெற்றுக் கொண்டதாகவும் அது போலியானதா இல்லையா என்பது தமக்குத் தெரியாது எனவும் இலங் கையர் தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)






எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு தேசிய இளைஞர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திர முனை வரையான வாகனத் தொடரணி நேற்றைய தினம் பருத்தித்துறை வெளிச்சவீட்டுக்கு அருகாமையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் 54 நாடுகளின் கொடிகளை ஏந்திய வாகனத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிரும் மாகாணசபை அதிகாரங்கள்!

அரசின் மீதான வெறுப்பினைக் கொட்டித் தீர்த்து விட்டார்கள் வடக்கு வாக்காளப் பெருமக்கள். ஏறத்தாழ 85 சதவீத வாக்குகள் என்பது பேரழிவின் பின்னரான 4 வருடங்களில் தமிழ் மக்களின் மனங்களில் பெரிதளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதைக் காட்டுகிறது.

அரசு மேற்கொள்ளும் அபிவிருத்திகள் இழப்பினால் வந்த ரணங்களை ஆற்றாது, கம்பள நெடுஞ்சாலைகள் யாவும் அந்நியமான கோடுகளாகவே வாழ்விழந்த மனிதருக்குத் தெரியும்.

தமிழ் மக்களின் கூட்டு மன உளவியலில் குவிந்திருந்த எதிர்ப்பரசியலின் உச்சத்தை மாகாணசபைத் தேர்தல் ஆழமாகப் பதிவு செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமும், வாக்குறுதிகளும் மக்களை அலையலையாக வாக்குச்சாவடிகளை நோக்கி நகர்த்தியிருக்கின்றன.

போலிப் பத்திரிகைகளைக் கண்டு மக்கள் ஏமாறவில்லை. எத்தனையோ தடையரண்களையும் துரோகத்தனங்களையும் கடந்து வந்துள்ள மக்களுக்கு சரியானது எது என்பதை உணர்ந்து கொள்ளும் ஆளுமை இருக்கும்.

சி.வி.விக்னேஸ்வரனைத் தவிர ஏனைய விருப்பு வாக்குத் தெரிவிலும் மக்கள் தெளிவாகத்தான் இருந்திருக்கிறார்கள்.

யாழ். மாவட்டத்தில் நடந்த சகல தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் ஒரு விருப்பு வாக்கினை விக்னேஸ்வரனுக்கு அளிக்குமாறு கட்சி பேதமின்றி எல்லோரும் கேட்டுக்கொண்டார்கள்.

ஆகவே, அவர் முதலாம் இடத்திற்கு வந்தது ஆச்சரியமான விடயமல்ல.

இருப்பினும், அரசியல் தளத்தில் அறிமுகமற்ற விடுதலைப்புலி தளபதியின் மனைவி என்கிற அடையாளத்தோடு தேர்தலில் இறங்கிய அனந்தி சசிதரன் பெற்ற விருப்பு வாக்குகள் பல செய்திகளைச் சொல்கின்றன.

அடிப்படை அரசியல் கோட்பாட்டில் மக்கள் உறுதியாக இருப்பதையே அச்செய்தி எடுத்துக் காட்டுகிறது.

தற்போது கட்டடம் இல்லாத மாகாணசபைக்கு 4 அமைச்சர்களைத் தெரிவு செய்யும் பணி தொடர்வதாக சொல்லப்படுகிறது.

அவை முடிந்த கையோடு சபை இயங்குவதற்கான நிதி ஒதுக்கீடு குறித்து இலங்கை ஜனாதிபதியோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

வெளிநாட்டு நாணயக் கையிருப்பு 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மத்திய வங்கி புளகாங்கிதம் அடைவதால் வடமாகாண சபைக்கு நிதி ஒதுக்குவதில் பெரிய சிக்கல் எதுவும் இருக்காது என்று நம்புவோம்.

இனி வடக்கின் சகல அபிவிருத்தி வேலைகளையும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் கலந்தாலோசித்தே முடிவெடுப்போம் என்று கூறும் சுதர்சன நாச்சியப்பன் சம்பூரில் அனல்மின்நிலையம் அமைக்கும் விவகாரத்தை கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணி அவர்களோடு பேசிக் கலந்தாலோசித்தால் வெளியேற்றப்பட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினை தீர உதவியாக இருக்கும்.

சம்பூரிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களைச் சந்தித்த ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையாரிடம் தமது நிலம் தமக்கு வேண்டும் என்கிற கோரிக்கை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒக்டோபர் 7 ஆம் திகதியன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், விக்னேஸ்வனுடன் கிழக்கின் எதிரணித் தலைவர் தண்டாயுதபாணியையும் சந்திக்கவேண்டும்.

அதேவேளை, வடகிழக்கில் மக்களின் காணிகளில் இராணுவம் இருக்கிறது என்கிற உண்மையை ஐ.நா. சபையில் போட்டுடைத்த நவநீதம்பிள்ளை அம்மையார் அபிவிருத்தி என்ற போர்வையில் பன்னாட்டுக் கம்பனிகளுக்கு தனியார் காணிகள் ஒதுக்கப்படுவது குறித்துப் பேசியிருக்க வேண்டும்.

அனேகமாக மார்ச்சில் நடைபெறவுள்ள பேரவை மாநாட்டில் அம்மையார் இது குறித்துப் பேசுவார் என நம்பப்படுகிறது.

வடமாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வந்த பின்னர் மிகுந்த அவதானத்துடன் இதனைப் பலர் வரவேற்றார்கள்.



வரலாற்று அனுபவங்களின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் ஏட்டில் இருப்பதைக் கூட நடைமுறைப்படுத்த இயலாதென்று ஒதுங்கிக் கொண்டார்கள். பொறுத்திருந்து பார்ப்போம் என்போர் சிலர்.

ஆனால், எந்த விமர்சனங்களுமின்றி இதோ தமிழ் மக்களுக்குத் தீர்வு வந்துவிட்டது என்று குதூகலிக்க ஆரம்பித்துவிட்டது ஒரு கூட்டம்.

அவர்கள் வேறு யாருமல்ல, 23 கிலோ மீற்றர் தொலைவிலிருக்கும் தமிழக காங்கிரஸ்காரர்களே. தமக்கு கிடைத்த வெற்றி போல் இதனைக் கொண்டாடுகிறார்கள்.

தம்மால் மட்டுமே ஈழ மக்களின் பிரச்சினைக்கு சரியான தீர்வினை வழங்க முடியுமென்று தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஞானதேசிகன் கூற ஆரம்பித்துள்ளார்.

நாணய மதிப்பிறக்கத்தால் குழப்பியிருக்கும் நிதி அமைச்சர் ப.சிதம்பரம், கூட்டமைப்பின் தேர்தல் வெற்றியை தனது வெற்றிபோல் மக்களுக்கு எடுத்துக் காட்ட முயல்வது தெரிகிறது.

கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் 58 தொகுதிகளில் தோல்வியுற்று 5 தொகுதிகளில் மட்டுமே அரும்பொட்டில் வெற்றி பெற்ற காங்கிரஸ் அந்த மாபெரும் தோல்வியிலிருந்து மீண்டெழ முடியாமல் இதுநாள்வரை தவித்து வந்தது.

கூட்டமைப்பின் வெற்றி என்கிற தடியை ஊன்றிப் பிடித்தபடி காங்கிரசின் அரசியல் செல்வாக்கினை மறுபடியும் தமிழகத்தில் தூக்கி நிமிர்த்த இதை விட்டால் வேறு வழியில்லையென்று முடிவெடுத்துவிட்டார்கள்.

இது தமது தலைவர் ராஜீவ் காந்தியினால் கொண்டு வரப்பட்ட 13-வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் உருவான மாகாணசபை என்பதால் அந்த வெற்றி தமக் [illegible] அவர்கள் வாழ்கின்றார்கள்.

அடுத்த வருடம் மே மாதமளவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் சாத்தியம் இருப்பதால் முதலில் தமிழகத்திலுள்ள ஈழ ஆதரவு சக்திகளின் ஆதரவுத் தளத்தினை உடைக்க வேண்டிய தேவை காங்கிரசுக்கு உண்டு.

அதற்கான வியூகங்களை இப்போதே வகுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தமிழக சட்டசபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை ஓரங்கட்டும் வகையிலும் தீர்வு குறித்து வடக்கு, கிழக்கு பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்கிற தமிழக மாணவர்களின் கோரிக்கையை மழுங்கடிக்கும் வகையிலும் வட இலங்கையில் தமிழர்களின் ஆட்சி வந்துவிட்டது.

இனி எந்தப்போராட்டங்களும் இங்கு தேவையில்லை என்று பரப்புரை செய்ய விரும்புகிறார்கள் இந்தக் காங்கிரஸார்.

இது அவர்களின் அரசியல் வாழ்வுப் பிரச்சினை. ஆனால் ஈழத் தமிழ் மக்களுக்கோ அடிப்படை வாழ்வுரிமைப் பிரச்சினை.

ஆனாலும் ப.சிதம்பரம் துள்ளிக் குதிப்பது போல ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் இருக்கும் 13-வது திருத்தச்சட்டத்தைக்கொண்டு இரு தேசங்களின் இறைமை என்பதன் அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர முடியாது என்பதை முன்னாள் நீதிபதி விக்னேஸ்வரனும் சட்டவாளர் சுமந்திரன் எம்.பியும் புரிந்துகொள்வார்கள்.

அதேவேளை, கடந்த வாரம் மாகாணசபைக்கான காணி உரிமை தொடர்பாக உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு 13-வது திருத்தச் சட்டத்தின் பலவீனமான முக்கிய பக்கங்களை சுட்டிக் காட்டியுள்ளமை கவனிக்கத் தக்கது.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம், மாகாணங்களின் காணி உரிமையானது மத்திய அரசின் ஆதிக்கத்தில் இருக்கும் என்கிற நீதிமன்றத் தீர்ப்பை பிரதம நீதிபதி மொஹான் பீரிஸ் வெளியிட்ட விவகாரமே, இப்போது புதிய சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

சுயாட்சிக்குரிய "அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு கிடைத்துள்ளது என்று அமைச்சர் ப.சிதம்பரம் பெருமிதமடைந்த ஓரிரு தினங்களில் இந்த நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்தது.

அத்தோடு பிரதம நீதிபதியாகவிருந்த சரத் என்.சில்வா, வடக்கு- கிழக்குப் பிரிப்பிற்கான தீர்ப்பினை வழங்கி 13-வது திருத்தச்சட்டத்தைப் பலவீனமாக்கிய முதல்படியையும் இப்போது நினைவுகூருவது பொருத்தமானது.

ஆகவே, தமிழக மக்களின் ஆதரவினை இழக்கும் வகையில் தமிழ்த் தேசிய அரசியலின் நகர்வுகள் அமைவது சரியானதல்ல. சர்வதேச ஆதரவு என்கிற தளத்தில் தமிழகத்தின் வகிபாகம் மிக முக்கியமானது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

- இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரெட் புகைப்பதன் காரணமாக வருடாந்தம் 20000 பேர் இறப்பு

## சுகாதார அமைச்சர் தகவல்

(கொழும்பு)

**புகைபிடிப்பதில் இருந்து முழுமையாக விடுபட்ட மாவட்டமாக பொலன றுவை மாவட்டம் மாற்றப்படும். இதேவேளை, நாட்டிலுள்ள சகல அரசியல் தலைமைகளையும் சிகரெட்டுக்கு எதிரான நாடளாவிய மட்டத்திலான போராட்டத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

சிகரெட் எதிர்ப்புக்கான விருதைப் பெற்ற அமைச்சரைப் பாராட்டி பொலனறுவை புலதிசி புத்தி மண்டபத்தில் நடைபெற்ற வைபத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை கோட்பாட்டின் கீழ் செயற்படும் போது போதைப் பொருள் தொடர்பான கொள்கை தீர்மானங்களைப் போன்று ஐ.நா. சபையில் 194 நாடுகள் உள்ளடங்கிய உலக சுகாதார நிறுவன வழிகாட்டல்களையும் சிபார்சுகளையும் நாம் அமுலாக்க வேண்டும்.

சாராயமும் புகைபிடித்தலும் காரணமாக 60 வீதமான தொற்றா நோய்கள் ஏற்படுகின்றன. சிகரெட் காரணமாக வருடாந்தம்



இலங்கையில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மரணிக்கின்றனர்.

சிகரெட்டினால் நாளாந்தம் மரணிப்போரின் எண்ணிக்கை 60 இற்கும் அதிகமாகும். இலவச சுகாதாரச் சேவையை பலமூட்ட ஐந்தாண்டு திட்டம் வகுத்துள்ளோம்.

ஜனாதிபதியிடம் அத்திட்டத்தை ஒப்படைத்தோம். ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த வேலைத்திட்டங்களை தேசிய மட்டத்தில் அமுலாக்கும் போது பொலன றுவை மாவட்டம் முன்மாதிரி காட்ட வேண்டும்.

புகைபிடிப்போர் இல்லாத மாவட்டமாக பொலனறுவையை மாற்றுவோம். இது இலேசான பணியல்ல. பல சக்திகளுடன் போராட வேண்டும் என்றார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உரை நிகழ்த்துகையில்,

சுகாதார சேவை பலம் இழந்தால் அந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. சுகாதார அமைச்சர் முழு உலகின் புகழையும் பெற்றுள்ளார் என்றார். (அ-2)

# நவராத்திரி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் சுன்னாகம் சொர்ணவரதகாளி அம்பாள் அறநெறிப் பாடசாலையும் இணைந்து உடுவில் பிரதேசத்தில் நடத்தும் நவராத்திரி விழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் சொர்ண வரதகாளி அம்பாள் ஆலய மண்டபத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவத் தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் சைவப் புலவர் க.ஈஸ்வரன் வழங்கும் "வல்லமை தாராயோ" என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (அ-7)

# தென்னாபிரிக்க பிரஜை கைது

தென்னாபிரிக்க பிரஜை ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக அக்கரைப் பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை அட்டாளைச் சேனை பிரதேசத்தில் கடவுச் சீட்டு மற்றும் விசா இல்லாத நிலையில் வீதியில் சுற்றித்திரிந்த தென்ஆபிரிக்கா நாட்டைச் சேர்ந்தவர் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் தொடர்பாக பொலிஸ் தலைமையகத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# இனி வரும் தேர்தல் காலங்களில் தனி பொலிஸ் அணி இயங்கும்

## தேர்தல் ஆணையாளர் உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் தேர்தல்கள் நடைபெறும் போது தனது கட்டளையை செயற்படுத்தவல்ல தனி பொலிஸ் அணியை தான் கொண்டிருப்பேன் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் சமயத்தில் தனது கட்டுப்பாட்டில் பொலிஸ் அணியை வைத்திருக்கும் ஆற்றலை ஆணையாளர் வெளிப்படுத்தியதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதியான சுனில் வட்டகல இந்த சந்திப்பின் போது எடுத்துரைத்துள்ளார்.

எதிர்கால தேர்தலிகளில் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்தில் அரச சொத்துக்களை பயன்படுத்துவதை நிறுத்துவதற்கு தனியான பொறிமுறையை ஏற்படுத்த போவதாகவும் மஹிந்த தேசப் பிரிய உறுதியளித்துள்ளார்.

சில அரசு நிறுவன அதிகாரிகள் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி தமக்கு விருப்பமான வேட்பாளர்களின் பயன்பாட்டுக்காக வழங்கியதாகவும் இக் கூட்டத்தில் பேசப்பட்டது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் இனி வரும் காலங்களில் சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக ஆணையாளர் கூறியுள்ளார். (அ-2)

# கொழும்பை வந்தடைந்தது மற்றொரு எண்ணெய் கப்பல்

15ஆயிரம் தொன் தரம் குறைந்த பெற்றோலுடன் மற்றுமொரு எரிபொருள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு 90 ஒக்ரேன் ரக பெற்றோலை சய்னா ஒயில் என்ற நிறுவனம் இறக்குமதி செய்துள்ளது.

எனினும் இந்தப் பெற்றோல் உரிய தரத்தை கொண்டமையவில்லை என முத்துராஜவெல எரிபொருள் ஆய்வுகூடத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதே கப்பலில் 95 ஒக்ரேன் ரகத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் தொன் பெற்றோல் தருவிக்கப்பட்டதாகவும் அதன் தரத்தில் எவ்வித பிரச்சினையும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கறுப்புப் பட்டியல் இடப்பட்ட நிறுவனங்களிடமிருந்து தரம்குறைந்த எரிபொருட்களைக் கொள்வனவு செய்த காரணத்தினால் கடந்த 2012 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஒன்பது பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக தெரியவருகின்றது. (அ-2)

# 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிரான வழக்கு தள்ளுபடி

13 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டம் சட்டவிரோதமானது எனத் தெரிவித்த நீர்கொழும்பைச் சேர்ந்த பத்மபிரிய சிறிவர்தன் என்பவரால் அண்மையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. உரிய காலத்திற்குப் பின்னர் சட்ட நியதிகளை கருத்திற்கொள்ளாது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் மனுதாரருக்கு எதிரான வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதியரசர் குழாம் இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. (அ-2)

# நைஜீரிய பிரஜைகள் விளக்கமறியலில்

(கொழும்பு)

நைஜீரிய பிரஜைகள் இருவரை எதிர் வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஆபிரிக்க வங்கியொன்றின் அதிகாரிகள் போன்று நடித்து லொத்தர் மோசடியில் ஈடுபட்டனர் என குற்றம் சாட்டப்பட்ட நைஜீரிய பிரஜைகள் இருவரை ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு நைஜீரியர்களும் ஒரு இலங்கை வாலிபரிடம் 1600 அமெரிக்க டொலர் அளவு பணத்தை ஏமாற்றி பறிக்க முயன்றனர் என குற்றம்சாட்டி கொழும்பு கோட்டை நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

லொத்தர் ஒன்றில் 1.6 மில்லியன் ரூபாவை தான் வென்றுள்ளதாகவும் அந்த பரிசுத் தொகையைப் பெற ஆயிரத்து 600 அமெரிக்க டொலருடன் கொம்பனி வீதியிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் சந்திக்க வருமாறு தனக்கு மின் அஞ்சலும் குறுஞ் செய்தியும் அனுப்பப்பட்டதாகவும் அந்த இளைஞன் முறைப்பாடு செய்திருந்தார்.

இதை தொடர்ந்து ஒக்காரோ கெனித், கூகோ மத்தியூ அவுஸி ஆகிய இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

சந்தேக நபர்களை பொலிஸார் கொழும்பு கோட்டை நீதவான் திலின கமமே முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவர்களை ஒக்டோபர் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-2)

# கட்டுரை போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினால் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெற்றுக் கொண்ட மாணவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி

**ஆரம்பப்பிரிவில்**

அம்பிகை சண்முகலிங்கன் (தரம்-4, யா/புனித பொஸ்கோ வித்தியாலயம்), கு.மாதங்கி (தரம்-5, யா/ இணுவில் இந்துக்கல்லூரி), மதுரா அருந்தவம் (தரம்-4, யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரும்

**கனிஷ்ட பிரிவில்**

அஷாிஹா அசோகன் (தரம்-7, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஸ்ரீகந்தராசா ஜெயவைஷாலி (தரம்-8, யா/வேம்படிமகளிர் உயர்தரப் பாடசாலை), முஹம்மத் அஸ்மி பாத்திமா ஸகியா (தரம்-7, கே/முஸ்லிம் மகா வித்தியாலயம் கேகாலை) ஆகியோரும்

**சிரேஷ்ட பிரிவில்**

கமலநாதன் நிரஞ்சன், (தரம்-10 யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சண்முகநாதன் மதுசன், (தரம்-9 ஹைலன்ஸ் கல்லூரி, நுவரெலியா), கு.மீரா (தரம்-11, யா/இணுவில் இந்துக் கல்லூரி) ஆகியோரும்

**அதிசிரேஷ்ட பிரிவில்**

செ.சேந்தன் (தரம்-12, யா/ இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்), டர்சிகா சிவம் (க.பொ.த(உ/த, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ரஜனி யோகேஸ்வரன் (தரம் -13, கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியவர்கள் புதிதாக முனைப்படையும் சமூக துன்பமா?



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

அறிமுகம்

நாடுகள் எல்லாவற்றிலும் பொதுவாக குடித்தொகை தொடர்பாக பெரிய மாறுதல்கள் ஏற்படுகின்றன. குழந்தைகள் பிறக்கும் வீதம் குறையும்போது மறுபுறம் உயிர்வாழும் வய தெல்லை அதிகரித்து செல்கின்றது. இது எல்லா நாடுகளிலும் பொருளாதார, சமூக, அரசியல் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பாதிப்புக்களை உருவாக்கி வருகிறது.

இளம் வயதினர் மீது சுமைகளை ஏற்படுத்தாமல் முதியவர்கள் நியாயமான வாழ்க்கை வசதிகளுடன் வாழ முடியுமா என்ற பிரச்சினை கூர்மையடைந்து வருகிறது.

உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும் முதியோர் பற்றிய சமூக நெருக்கடி பற்றியே இங்கு குறிப்பிடுகிறேன் என்பது.

உலகம் முழுவதிலும் முதியவர்கள் பெருகிச் செல்கிறார்கள். இவர்களால் தமது தேவைகளை நிறைவேற்ற இப்போது உழைக்க முடியாது. இவர்களது உழைப்பையும் அவர்கள் சேமித்திருக்கக் கூடியவற்றையும் உறிஞ்சி அதனால் வளர்ந்துவிட்ட இளம் தலைமுறை அவர்களை ஒரு ''எரிச்சலூட்டும் மனிதர்களாக'' நோக்குகின்றனர்.

இந்த முதியோர்- இளைஞர் சார்ந்த முரண்பட்ட நிலைமை, முதியோர் இடர்பாடுகள் பற்றி இன்று சமூக உணர்வுடன் கலந்துரையாடுவோமா?

முதிர்ச்சி இயலாமையா?

உலகின் மொத்த மக்கள் தொகை 2011 இல் 700 கோடியாக இருந்தபோதும் 2050 இல் அது 900 கோடியாக அதிகரித்து விடும் என்று உலக வங்கி நிபுணர்கள் கணித்துள்ளனர்.

பல்வேறு நாடுகளிலும் இளம் தலைமுறையினர் குழந்தைகளை அதிகம் பெறுவதில் இயல்பான நாட்டம் குறைந்தவர்களாகி வருகின்றனர். வளர்ந்துவிட்ட செல்வந்த நாடுகளில் ஆண்களுக்கு சமனான வாழ்க்கை முறைமையை தாங்களும் வடிவமைக்கும் எண்ணம் இளம் பெண்பிள்ளைகளிடம் வளர்ந்து வருகிறது. இதன் காரணமாக '' திருமணம் என்பது குழந்தைகள் பெறுவதற்காக அல்ல" என்ற சமூக உணர்வு பலமடைந்து வருகின்றது. இதனால் உலகம் முழுவதிலுமே சனத்தொகை அதிகரிப்பது தேக்க நிலையடைகின்றது.

மறுபுறம் சுகாதார வசதிகள், மருத்துவ துறை முன்னேற்றங்கள், உணவு பழக்க முறைமை என்பவற்றினால் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொகை அதிகரித்து வருகின்றது.


2050 ஆம் ஆண்டுக்கிடையில் உலக மொத்த மக்கள் தொகையில் தொழில்புரியக் கூடிய இளைஞர்கள் தொகை 100 கோடியால் அதிகரிக்கும். ஆனால், இதேகாலப் பகுதியில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொகை 125 கோடியால் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.(Ronald Lee and Andrew Mason:2011) 25 வயதிலும் குறைந்தவர்கள் தொகை 300 கோடியாக இருக்கும் என்றும் லீ மற்றும் மேசன் ஆகியோர் கணித்துள்ளார்கள். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இயலாமைக்குட்பட்டவர்கள். அவர்களால் முன்புபோல் உற்பத்திப் பணிகளில் ஈடுபட முடியாது. அவர்கள் களைத்துப் போய் விட்டனர். தமக்காகவும் தம் குடும்பங்களுக்காகவும் தாம் வாழும் சமூகத்திற்காக முன்பு உழைத்ததால் இப்போது ஓய்ந்து போய் விட்டனர். இவர்கள் சோம்பேறிகளா? சமூக ரீதியில் கழித்து விடப்பட வேண் டியவர்களா? இவர்களது கடந்த கால உழைப்பினால் உருவாக்கப்பட்ட தற்போதைய சமூக வளர்ச்சிகளின் நன்மைகளில் அவர்களுக்கு உரிமை இல்லையா?

உணவின்றியும் மருந்து இன்றியும் மனித ஊடாட்டம் இன்றியும் கௌரவமான கணிப்பு இல்லாமலும் அவர்கள் பிரித்து ஒதுக்கப்பட வேண்டுமா? இது சமூக நீதியாகுமா? ஏன் இப்போது இளைஞர்களாக இருப்பவர்களும் முதுமைத்துறை முகத்தை வந்தடைய மாட்டார்களா? இது இயல்பான சமூக செயல் ஒழுங்குதானே! இன்றைய முதியோர் பற்றி நாளைய முதியோர் (தற்போதைய இளைஞர்) கரிசனை கொள்ள வேண்டியதில்லையா?

இவை சமூகம் உள்ளவரை உயிர்த் துடிப்புடன் இருக்கப் போகின்ற மானிடப் பண்பு மிக்க வினாக்கள்தானே! இவற்றுக்கு சமூகம் தருகின்ற நேர்மையான விடைகள்தான் சமூக இளைஞர்களது உற்பத்தி மற்றும் வேலை வேட்கையை அதிகரிக்கச் செய்யும் என்பது தானே உண்மை.

தற்போதைய முதியவர்கள் அனுபவங்களின் உன்னதமான புதையல்கள். அவர்கள் சொல்வதெல்லாம் அவர்களது துன்பங்களினாலும் உழைப்பினாலும் பரிசோதிக்கப்பட்ட உண்மைகள். அவை கற்பனைகளல்ல. எதிர்வுகூறவுமல்ல. அவர்களது அறிவு, உணர்வு, மனவெழுச்சி போன்ற எல்லாவற்றுக்குமுரிய அனுபவ வயது அறுபது அல்லது அதற்கும்மேல்.

கல்விமான்களும் விஞ்ஞானிகளும் சமய சான்றோர்களும் முதுமையிலும் பொருளாதார பாதுகாப்புடன் வாழமுடியலாம். ஆனால், உடல் உழைப்பாளர்களாக முதல்நிலை உற்பத்தித் தளங்களில் கடினமாக உழைத்தவர்கள் சமூக நன்றியுணர்வின்மையினால் நிராகரிக்கப்பட்டு துன்பியல் வாழ்வு மையங்களுக்குள் சிறை வைக்கப்பட்டு விடுகிறார்கள்.




நோயாளராகவும் வறியவராகவும் மனித நேசமும் மனித வாடையும் கிடைக்காத பரிதாப மனிதர்களாகவும் சிலசமயம் வெறுக்கத்தக்க யாசகர்களாகவும் அவர்களது முதுமை வாழ்வு அவர்களை வடிவமைத்து விடுகிறது.

முதியோரை பார்க்கும் நிதானமான சமூக அணுகுமுறை இளைஞர்களிடம் வலிமையுடன் வளர்ச்சி பெற வேண்டும். காவோலைகளை குருத்தோலைகள் மதிக்க வேண்டு மல்லவா?

முதுமை என்பது அனுபவ முதிர்வு, ஆற்றலின் பின்னிலை, தற்போதைய சமூக முன்னேற்றங்களின் முதலீட்டாளர்கள் இவர்களே. இளைஞர்கள் வசதியாகவும் உற்சாகமாகவும் பயணிப்பதற்கு இடம் தருவதற்காக அவர்கள் சமுதாய பெருஞ்சாலையின் கடைக் கோடிக்கு போய்க் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான். இது சமூக உணர்வாக வளர்க்கப்பட வேண்டும். முதியோரின் கடந்தகால சமுதாய பங்களிப்பு பற்றிய நன்றியுணர்வுடன் முதியோர் பேணப்பட வேண்டும். புதிய அடுத்த தலைமுறையினருடன் நீங்கள் செலவிட முடியாது என்று கருதும் மணித்துளிகளை அவர்கள் வழங்குவார்கள். முதியவர்கள் ஒருகாலத்தில் மலையில் தோன்றிய அருவிகள்தான். இப்போது கடலில் சங்கமிக்கச் செல்லும் பேராறு.

அவர்களை ஒதுக்கக்கூடாது. அவர்கள் ஒதுங்கி நிற்கும்படி நிர்ப்பந்திக்கவும் கூடாது. அவர்களது முதிர்வு ஆற்றல்களையும் மதியுரைகளையும் காவல் திறன்களையும் நிராகரித்ததால்தான் மழலைகள் பாலியல் துன்புறுத்தலின் கவனக்குவிப்புக்களாகி வருகின்றனர்.

வீட்டில் உள்ள முதியோரைத் துரத்திவிட்டு குழந்தைகளின் பாலியல் வன்முறை பற்றி கூட்டம் போட்டு சொல்லிக் கொண்டிருக்கிறோம். பத்திரிகைகளில் கருத்துக்களை மையில் நனைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் குழந்தைகளைத் துன்புறுத்துபவர்கள் நல்ல பக்கங்களை வாசிப்பதில்லை. நல்லவற்றை உணர்வதுமில்லை. பச்சைக் கிளிகளைக் கடித்துக் குதறும் நரிக்கூட்டங்கள் ஏன் நல்லவற்றை கற்கப் போகின்றன?

வீடும் நாடும் முதியோரை முதிர்வின் சின்னங்களாக பார்க்கப்பழகுவது அவசியமல்லவா? அவர்கள் இப்போது ஆற்றலுடன் அழகுடனில்லை. ஏனெனில் அவற்றையெல்லாம் தம் அடுத்த தலைமுறையினருக்கு கைமாற்றி விட்டர்களே!

இளைஞர்களுக்கா முதியவர்களுக்கா முன்னுரிமை

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் செல்வந்த நாடுகளில் குழந்தைகள் அதிகம் பிறந்தனர். அவர்கள் இதனை குழந்தைகளின் பெருக்கம் (Baby Boom) என்றனர். வருமானம் குறைந்த நாடுகளிலும் இதேகாலத்தில் - இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் மருத்துவ வசதிகள் பெருகியதால் குழந்தைகளின் இறப்பு வீதம் வீழ்ச்சி கண்டது. இந்த குடிப்பெருக்கம் ஊழியப் படையின் பெருக்கமாகி தற்போது உலகம் முழுவதும் முதியவர்களின் அசாதாரண பெருக்கமாகி

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

யுள்ளது. இதனை நரைப்புரட்சி (Grey Revolution) என்கின்றனர். தலை "மை" என்பது நரையை திரைபோட்டு மறைத்தாலும் பெருக்கம் பெருக்கம் தான்.

இந்த மழலைப் பெருக்கம் உலகம் முழுவதும் 1960 களில் நின்று விட்டது. குழந்தைகள் பிறக்கும்வீதம் எல்லா நாடுகளிலும் குறைந்து விட்டது. ஒரு பெண்ணுக்குரிய குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கை ஆபிரிக்காவில் ஐந்திலும் குறைவு, பாகிஸ்தானில் இது நான்கு. இந்தியாவிலும் பங்களாதேசிலும் இது இரண்டு, சீனாவில் இது 1.5.

குழந்தைகளிலிருந்து முதியவர்களாகும் வரை மனிதர்கள் நுகர்கிறார்கள். எந்த வயதில் இவர்கள் நுகர்வுக்காக அதிகம் செலவு செய்வது என்பதை முதன்மையான பொருளாதார நெருக்கடியாகும்.

வட அமெரிக்கா போன்ற நாடுகளில் சிறந்த நலனோன்பு செய்ற்றிட்டங்களினால் 85 இலும் கூடிய வயதில் அதிகம் நுகர்ந்து வருகின்றனர். கனடா நாட்டில் முதியவர்களுக்கான தனியான வதிவிடம், முதியோர் ஒன்றுகூடல் மையங்கள், முதியோர் நலத்துறை (Health) பராமரிப்பு, முதியோர் மகிழ்வுறு மையங்கள், ஓய்வூதியம் போன்ற பல ஏற்பாடுகள் நன்கு உருவாக்கப்பட்டுள்ளன. இளம் வயதிலிருந்ததை விட பலமடங்கு அதிகமாக இவர்களது நுகர்வுக்கு செலவிடப்படுகிறது.

இந்த முதியோருக்குரிய செலவுக்கான பணம் அரசாங்கங்களினாலும் தனியாரினாலும் வழங்கப்பட்டு வருகின்றன.

மறுபுறம் உழைக்கும் இளம் வயதினருக்குரிய ஓய்வூதியத்திட்டம், வரிவிதிப்பு, தொழில் நடைமுறைகளின் கடின தன்மை என்பன கடுமையானவையாக மாற்றப்பட்டு வருகின்றன. இதனால் நீண்ட வயதுக்கு தொழில் புரியாது முன்னதாகவே இளைப்பாறி விடுகின்ற போக்கும் செல்வந்த நாடுகளில் அதிகரித்து வருகின்றது.

உழைக்கும் இளைஞருக்குரியவற்றை உழைக்காத ஓய்வூதியர்கள் உறிஞ்சி விடுவதாகவும் உணரப்படுகின்றது.

ஜேர்மனியில் இளைஞர்களை விட பலமடங்கு அதிகமாக முதியவர்கள் நாட்டின் வளங்களை அனுபவிக்கின்றனர். ஆனால், இந்தியாவில் முதியோர் தொகையை விட இளைஞர் தொகையே அதிகமிருப்பதால் இளைஞர்களே அதிகம் நுகர்கிறார்கள்.

யாருக்காக யார் நுகர்வை விட்டுக் கொடுப்பது என்பதே பொருளாதார, சமூக நெருக்கடியாகி விட்டது. உழைக்கும் நபர்களைவிட ஓய்வுபெ ற்ற முதியவர்கள் அதிக நுகர்வு வசதிகளைப் பெறும் போது பெரும்பா லானவர்கள் இயன்றளவு விரைவாக இளைப்பாறிவிட ஆசைப்படுகின்றனர்.

ஓய்வுபெற்றிருக்கும் முதியவர்களைவிட உழைக்கும் இளைஞர்களின் தொகை அதிகமாக இருந்தால் மாத்திரமே ஒரு நாட்டின் வாழ்க்கைத்தரம் உயர முடியும் என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

முதுமை நிர்ப்பந்திக்கும் கொள்கைகள்

முதியோர் தொகை பெருகிவரும் போது உழைக்கும் வயதினரைவிட முதியோருக்கு அதிகம் செலவிடுவது நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாகவுள்ளது.

இதனால் முதியோர் சார்ந்த செலவுகளைச் சமாளிக்க புதிய கொள்கைகள் உருவாகி வருகின்றன.

(I) இளைப்பாறும் வயதெல்லையை இயன்றவரை நீடித்தல் முதியோருக்கான அதிகரிக்கும் செலவை ஈடுசெய்வதற்கு தொழில் புரியும் காலத்தை நீட்டிக்க வேண்டிய கட்டாயம் பல நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது. மெக்சிக்கோ மற்றும் பிறேசிலுக்கு இது மூன்று வருடங்களாகவும் சீனாவுக்கு ஆறு வருடங்களாகவும் ஜப்பானுக்கு எட்டு வருடங்களாகவும் ஜேர்மனிக்கு ஒன்பது வருடங்களாகவுமுள்ளன.(Lee and mason 2011)

(II) ஓய்வூதியர் நலன் செலவுகளைக் குறைத்தல்

ஓய்வூதியர் நலவசதிகளை அரசாங்கம் குறைத்தால் குடும்பங்கள் தமது நுகர்வை குறைத்து சேமிப்பை எதிர்காலத்துக்காக அதிகரிப்பர் என்று நாடுகள் நம்புகின்றன.

(III) உழைக்கும் கால வரி அறவீட்டை அதிகரித்தல்

இவ்வாறு செய்வதால் குடும்ப மட்டத்தில் நுகர்வுக்காக செலவிடுவதைக் குறைக்கச் செய்யலாம். அரசாங்கம் தனது சேமிப்பை அதிகரித்து பின்பு முதியவர்களுக்கு செலவிடக்கூடிய ஆற்றலையும் அதிகரித்துக் கொள்ளலாம் என்றும் கூறப்படுகின்றது.

முடிவுரை

முதியவர்களைப்பற்றிய அக்கறை அரசாங்க மட்டத்தில் அதிகரித்து வருகின்றது. ஆனாலும் சமூக மட்டத்தில் முதியவர்களுக்கான ஒன்றுகூடும் ஏற்பாடுகளும் நிறுவனங்களும் நன்கு ஒழுங்குபடுத்தப்படவில்லை. குறிப்பாக அரச ஓய்வூதியம் பெறாதவர்களின் பொருளாதார நிலையும் சமூக மதிப்பும் பெரிதும் கீழ் நிலையில் உள்ளது.


இளம் வயதில் தமது பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்த பிள்ளைகள் வெளிநாட்டுக்குப்போன பின்பு தம்மை துன்பியலாக பார்ப்பதை எண்ணி உள் வருத்தங்கள்- மன அழுத்தங்களுடன் வாழும் பெற்றோர் பெருகி விட்டனர்.

புதிய தலைமுறை, பெற்றோர் தமக்கு செய்த கடமைகளை உயிரியல் செயல்முறையாகவே விளக்கமளிக்கின்றனர். தமது வாழ்வின் வசதிகளுக்கு இடையூறு செய்யும் மனிதர்களாகவே அவர்களைப் பார்க்கின்றனர். இது புலம்பெயர்ந்தோரின் சமூக கோட்பாடாகி வலிமை பெற்றுவிட்டது. நவீன உலகில் வாழும் ஒரு அண்ணனின் உணர்வலை பின்னிய கவிதை இதோ.

"நானும் தங்கையும் சிறுவயதில் சண்டையிடுவோம் யார் அம்மாவின் மடியில் இருப்பதென்று. இப்போதும் இருவரும் சண்டையிடுகிறோம் யார் அம்மாவைவைத் திருப்பதென்று"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்ச்சைக்குரிய விடயமாகும் முதலமைச்சரின் சத்தியப்பிரமாணம்



ஒரு நல்ல ஆரம்பம் அரைப் பகுதி வேலை நிறைவுற்றதற்குச் சமமானது என்பது ஆங்கிலப் பழமொழி. முதற்கோணல் முற்றிலும் கோணல் என்ற பழமொழி தமிழிலும் உண்டு. எனவே எதை ஆரம்பித்தாலும் அந்த ஆரம்பம் நல்லதாக அமையவேண்டும் என்பதில் அனைவரும் உறுதியாகவும் தெளிவாகவும் இருப்பது அவசியம்.

இந்த வகையில் இப்போது வடக்கின் மாகாண முதலமைச்சர் எவர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுப்பது என்ற சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

உண்மையில் யார் முன் சத்தியப்பிரமாணம் எடுப்பது என்பதை ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக ஆக்கியிருக்க வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் அது ஒரு சம்பிரதாயமான நிகழ்வு. அதேநேரம் சத்தியப்பிரமாணம் எடுத்தல் என்பது குறித்த பதவியில் அமர்வதற்கான - பதவிக்குரிய அதிகாரங்களைப் பொறுப்பேற்பதற்கான நுழைவாயில் என்று கூறிக்கொள்ளலாம்.

எனவே நுழைவாயிலில் வைத்து எங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவது பொருத்துடையதல்ல. தேவையானவற்றில் உறுதியாக இருப்பதும் விட்டுக்கொடுக்கக்கூடிய விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வதும் எங்களுடைய இலக்கை அடைவதற்கான இராஜதந்திரமாக இருக்கும்.

பொதுவில் எங்களுடைய உரிமைப் போராட்டத்தில் நாம் இராஜதந்திர முன்னெடுப்பில் தோல்வி கண்டுவிட்டோம் என்ற விமர்சனங்கள் உண்டு.

எனவே, வடக்கின் மாகாண சபை முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ள ஓய்வுநிலை நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது.

ஜனாதிபதிக்கு முன்னால் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வதால் இந்த நாட்டின் அரசாங்கம் எதையும் செய்துவிடப்போவதில்லை என்பது தெரிந்த விடயம்.

ஆனாலும், பதவியேற்கின்ற விடயத்திலேயே முரண்பாட்டைக் கொண்டிருக்கத்தேவையில்லை என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

இந்த நாட்டில் எந்தப் பதவிகளை ஒருவர் பொறுப்பேற்பதாக இருந்தாலும் அவர் 6ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வது அவசியமாகும். அத்தகையதொரு சத்தியப்பிரமாணத்தில் ஒப்பமிடும் நிகழ்வு பரபரப்பில்லாமல் நடந்து போகிறது. அதுபற்றி யாருமே அதிகம் அலட்டிக் கொள்வதில்லை.

ஒருகாலத்தில் 6ஆவது திருத்தச் சட்டமூலம் அமுலாகியபோது அச் சட்டமூலத்திற்கு அமைவாகச் சத்தியப்பிரமாணம் செய்வதில்லை என்பதால் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்து போன வரலாற்றுப் பதிவு நம்மிடம் உண்டு.

## ஜனாதிபதிக்கு முன் சத்தியப் பிரமாணம் செய்வதில் எந்தத் தவறும் இல்லை

அவ்வாறான பதிவைக்கொண்ட சட்டமூலத்திற்கு எதுவித எதிர்ப்பும் இல்லாமல், பிரிவினைக்கு எதிராகச் செயற்படமாட்டோம் என்று சத்தியப்பிரமாணம் செய்வதில் நாம் பின்நிற்கவில்லை.

அவ்வாறாயின் வடக்கு மாகாண முதலமைச்சர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன் சத்தியப்பிரமாணம் செய்வது தொடர்பில் யாரேனும் திமிறினால் அதில் நியாயம் இருக்கமுடியாது.

இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசுடன் பேசவேண்டிய தேவையுள்ளது. பேச்சு வார்த்தைக்கு சர்வதேச அனுசரணை அல்லது மத்தியஸ்தம் இருப்பது அவசியமாயினும் இலங்கை அரசுடன்தான் தமிழ்த் தரப்புப் பேசவேண்டும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

எனவே அவ்வாறானதொரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான நுழைவாயில் இச்சத்தியப்பிரமாணமாகும்.

அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும்போது எங்கள் உரிமைகள் தொடர்பில் நாம் இறுக்கமாகப் பேசவேண்டும். அத்தகைய இறுக்கம் எங்களுக்குப் பயன்படக் கூடியது. அதனால் தமிழ்மக்கள் நன்மையடைவர். எனவே, இறுக்க வேண்டிய இடத்தில் இறுக்கவேண்டும். இளக்க வேண்டிய இடத்தில் இளக்கவேண்டும். இதைவிடுத்து தேவையில்லாத இடத்தில் இறுக்கினால் தேவையுள்ள இடத்தில் இறுக்கமுடியாமல் போய்விடும். இந்த உண்மையை உணர்ந்தால் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் ஜனாதிபதிக்கு முன்பாக சத்தியப்பிரமாணம் செய்வது ஒரு சுமுகமான நுழைவாயிலுக்கு வழிவகுக்கும்.

### கடந்த காலத் தவறுகள்

எங்களின் போராட்ட வரலாறுகளை ஆய்வு செய்கின்றவர்கள் எங்கள் போராட்டப்பாதையில் நிகழ்ந்த தவறுகளையும் தப்புகளையும் சுட்டிக்காட்டவே செய்வர்.

நாங்கள் விட்ட தவறுகளை மற்றவர்கள் சுட்டிக்காட்டுவதற்கு முன்னதாக, நாங்களே அதை உணர்ந்து கொள்வது எங்களைத் திருத்திக் கொள்வதற்கு உதவும். இதனால்தான் சுயத்தை மதிப்பிடல் என்ற விடயம் இன்று முக்கியத்துவம் பெறுகின்றது.

அந்தவகையில் விடுதலைப்புலிகள் நடத்திய எத்தனையோ தாக்குதல்களுக்குக் கிடைத்த ஆதரவும் ஆர்ப்பரிப்பும் மாவிலாறு நீர் அணையை அடைத்தபோது ஏற்படவில்லை.

மாவிலாறு நீரை அடைத்திருக்கத் தேவையில்லை என்ற பொதுக் கருத்துத்தான் இதற்குக் காரணம். எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்க வேண்டும் என்பதில்; தமக்குள் முரண்பாடு கொண்ட நாடுகளும் இணங்கிக்கொண்ட துரோகத்தனம் மறக்கமுடியாது. எனினும் அவர்களின் கபடச் சூழ்ச்சிக்கு மாவிலாறு நீரடைப்பு நுழைவாயிலாயிற்று எனும்போது அதைச் செய்யாமல் இருந்திருக்கலாமோ என்று சிந்திப்பது மனித மனத்தின் இயல்பு. எதுவாயினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எங்கள் பக்கத்தில் நியாயங்கள் உண்டு என்ற சூழ்நிலையில் இருந்து நாம் ஒருபோதும் விலகிவிடக்கூடாது.

2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றபோது மஹிந்த ராஜபக்ஷவும் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவும் போட்டியிட்டனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தங்கள் எதிர்ப்பைக் காட்டவேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்தது.

சரத்பொன்சேகா நேர்மையானவராக - தமிழர் நலன் கருதுபவராக இருந்திருந்தால் அவருக்கு ஆதரவு தெரிவிப்பதில் நியாயம் இருந்திருக்கும். ஆனால் சரத்பொன்சேகா இந்த நாடு சிங்களவருக்கு உரியது என்று கூறியவர்.

ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிர்ப்பைக் காட்டவேண்டும் என்பதற்காக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தமை புத்திசாலித்தனமான விடயமன்று. ஜனாதிபதித் தேர்தலில் பக்கம் சாராமல் இருந்திருந்தால் அது ஒரு சாதகமான சூழ்நிலைக்கு வழி வகுத்திருக்கும்.

இதுதவிர, சரத் பொன்சேகா அண்மையில் ஆற்றிய உரை ஒன்றில், காணாமற் போனவர்கள் என்று தமிழர்களில் எவரும் இல்லை. அவர்கள் நட்ட ஈட்டைப் பெறுவதற்காகவே இவ்வாறு கூறுகின்றனர் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த மோசமான கருத்தைத் தெரிவிக்கக்கூடிய ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தமை மகா தவறு என்பதை காலங்கடந்தேனும் உணர்ந்துகொள்வது அவசியம்.

இப்போது கூட வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்பது இலங்கை அரசு விரும்பி நடத்தியதொன்றல்ல. அது சர்வதேசத்தின் கடும்பிடியால் நடந்தது. இந்நிலையில் ஜனாதிபதிக்கு முன்னால் சத்தியப்பிரமாணம் செய்வதில்லை என்று எடுக்கப்படும் முடிவு, தமிழர்களும் முட்டையில் மயிர் பிடுங்குகிறார்கள் என்று சர்வதேசப் பிரதிநிதிகள் தங்களுக்குள் பேசிக்கொள்ளச் செய்துவிடும்.

எனவே தேவையற்ற விடயங்களைச் சர்ச்சைக்குரியதாக்குவதைத் தவிர்த்து காரியங்களை எளிமையாகவும் நுட்பமாகவும் செய்து முடிக்கவேண்டும். இதுவே இன்றைய தேவை ஆகும்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை தேவைகள் இன்றி அல்லலுறும் மாங்குளம் நகரம்

(மல்லாவி)

**மாங்குளம் நகரப்பகுதியில் பொது மலசலகூடம் மற்றும் பேருந்து தரிப்பிடம், பொதுச்சந்தை என பலதரப்பட்ட அடிப் படை தேவைகளை புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் அமைத்து தராமையால் தாம் பாதிக்கப்படுவதாக பயணிகள் மற்றும் பொதுமக்கள்,வர்த்தகர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், வட பகுதியின் மையமாகவுள்ள மாங்குளம் நகரமானது, ஏ-9 வீதிக்கு அண்மையில் அமைந்திருப்பதன் காரணமாகவும் வடக்கு மாகாணசபையின் முக்கிய அலுவலகங்கள் இங்கு அமைக்கப்பட இருப்பதன் காரணமாகவும் இந் நகர் முக்கியத்துவம் பெறும் இடமாக இருக்கின்ற போதிலும் மேலும் மக்கள் மீள்குடியேறி 4 வருடங்கள் கடந்த நிலையிலும் இப் பகுதியில் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந் நகரத்திற்கு தமது தேவையின் பொருட்டு வருகை தரும் பேருந்து மற்றும் புகையிரத பயணிகள் மலசல கூடவசதி இன்றி அவதியுறுவதை காணக் கூடியதாகவுள்ளது.

மேலும் பேருந்து தரிப்பிட வசதியின்றி கொளுத்தும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் வீதியின் மருங்குகளிலுமுள்ள கடைகளின் தாழ்வாரங்களில் பேருந்துகளுக்காக பொதுமக்கள் காத்திருப்பது கவலைக்குரியது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் விவசாய பொருட்கள் உட்பட கைத்தொழில் பொருட்களையும் ஏனைய பொருட்களையும் விற்கவோ, வாங்கவோ சந்தை வசதியின்றி இப் பகுதி மக்கள் கிளிநொச்சிக்கோ அல்லது மல்லாவிக்கோ சென்று வருகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப்பகுதியில் கல்வி கற்கின்ற போதிலும் இவர்களின் மேலதிக கற்றல் தேவைகளுக்கான நூலக வசதிகள் இங்கு ஏற்படுத்தப்படவில்லை.




எனவே, போரினால் பாதிக்கப் பட்டு மீண்டும் எழுச்சி பெறமுயற்சிக்கின்ற இம்மக்களுக்கு முன்னேற்றப் பாதைகளாக உள்ள மேற்படி தேவைகளை துறைசார்ந்தோர் நிறைவேற்றி தர வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-15)

# கமக்கார ஓய்வூதிய பணம் கிடைக்கவில்லை

(குருமன்காடு)

கமக்காரர் ஓய்வூதிய சமூக நலத் திட்டத்தின் கீழ் வவுனியா கமத் தொழில் கமநல காப்புறுதி சபையிடம் காப்புறுதி தொகைகளை செலுத்திய விவசாயிகள் குறித்தவய தெல்லை கடந்த பின்னரும் அவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.

இவ் ஓய்வூதிய பணம் வழங்குவதற்கு தேவையான ஆவணங்களை முறைப்படி கையளித்தும் கொடுப்பனவு செய்வதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என தெரிவித்தனர்.

காப்புறுதி சபையிடம் விவசாயிகள் நேரில் சென்று வினவிய போது அவர்கள் காலக்கெடு கொடுத்து அலைக்கழிப்பதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக கமநல காப்புறுதி சபை உரிய நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர். (ம-250)

# தனது குடும்பத்தை தாக்கிய நபருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு விசுவமடுப் பகுதியில் குடித்துவிட்டு தினமும் தனது 12 வயது மகளையும் மனைவியையும் தகாத வார்த்தைகளாலும் உடலியல் ரீதியாகவும் கணவர் கொடுமைப்படுத்துவதாக அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மகள் தனது கணவரின் துன்புறுத்தல் காரணமாக பாடசாலைக்கு செல்லமுடியாதிருப்பதாகவும் அவரது நடவடிக்கைகளால் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம)



ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின் கீழ் மஹிந்தோதயா திட்டத்தின் கீழ் 80 இலட்சம் ரூபா நிதியில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடத்தைப் படத்தில் காணலாம். (படம்:- மல்லாவிச் செய்தியாளர்)

# துஷ்பிரயோக சம்பவம்; நபருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை பகுதியில் 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் புரிந்ததாக கூறப்படும் 24 வயது நபர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைதுசெய்து முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றில் ஆஜர்படுத்திய வேளை, அந் நபரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

இந்த நபர் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற அடிப்படையில் அவரை வவுனியா வைத்தியசாலையின் மனநிலை சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (ம)

# சிறுவர் அரங்கு நிகழ்வு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளிடையே நடைபெறுகின்ற உப மாகாண மட்ட சிறுவர் அரங்கு நிகழ்வுகளில் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு மு/முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் வலய மட்ட போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சிறுவர் அரங்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-15)

# விளையாட்டு விழா

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முன்பள்ளிகளின் விளையாட்டு விழா இன்று பி.ப. 2 மணிக்கு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி.,முல்லை. இணைந்த சிவில் பாதுகாப்பு கட்டளை அதிகாரி டபிள்யூ.டபிள்யூ.ரட்ணபிரிய பந்து கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தர மூர்த்தி, ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி த.பங்கயச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-15)

# சிறுவர்,முதியோர்,மாற்றுவலுவுடையோர் தினப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

**சிறுவர் தினம்- கட்டுரைப் போட்டி**

**ஆரம்பப் பிரிவு**

து.புருசோத்தமன்- மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வி., இ.நிருத்திகா-மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வி., இ.விதுர்சிகா- மு/விசுவநாதர் ஆரம்பப் பா.

**கனிஷ்ட பிரிவு**

கி.விதுர்சியா- மு/விசுவமடு ம.வி., ஜெ.சயந்தா-மு/கைவேலி கணேசா வி., பீ.றிஸ்பியா-மு/மந்துவில் அரசரட்ணம்.வி.

**இடை நிலைப்பிரிவு**

ஸ.சஜிதா- மு/உடையார் கட்டு ம.வி.,சோ.துவாரகா-மு/விசுவமடு ம.வி., க.மோகனா-மு/சுதந்திரபுரம் அ.த.க.பா.

**மேற் பிரிவு**

இ.கார்த்திகா-மு/விசுவமடு ம.வி., ப.வதனி-மு/உடையார்கட்டு ம.வி., க.சயந்தினி- மு/விசுவமடு ம.வி.

**முதியோர்தினம்-கட்டுரைப்போட்டி**

**ஆரம்பப் பிரிவு**

ம.ரதீசன்-மு/ஸ்ரீசுப்பிரமணிய வி., ச.சுகிர்தா-மு/ஸ்ரீசுப்பிரமணிய வி., சு.வேணுஜா- மு/புதுக்குடியிருப்பு றோ.க.வி.

**கனிஷ்ட பிரிவு**

சி.அனுசன் -மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வி. , ம.கீர்த்தி- மு/புதுக்குடியிருப்பு ம.க., பா.கீர்த்தனா-மு/சுதந்திரபுரம் அ.த.க.பா.

**இடை நிலைப்பிரிவு**

வி.துவாரகா-மு/சுதந்திரபுரம் அ.த.க.பா, க.தனுசியா-மு/தேவிபுரம் அ.த.க.பா., க.லேசியன் -மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வி.

**மேற்பிரிவு**

ஸ்ரீ.கஸ்வினி-மு/புதுக்குடியிருப்பு ம.க., க.வினோதினி- மு/தேவிபுரம் அ.த.க.பா., மே.மரியமிதுரா-மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.

**மாற்றுவலுவுடையோர்- கட்டுரைப்போட்டி**

**ஆரம்பப்பிரிவு**

இ.கேதாரணி-மு/உடையார் கட்டு அ.த.க.பா., கு.ஜெனனி-மு/நெத்தலியாறு த.வி., ர.பவித்திரன்-மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.

**கனிஷ்ட பிரிவு**

மு.அறிவழகி-மு/பாரதி வி., சி.றொசானி-மு/பாரதி வி., ஜெ.சத்தியகலா-மு/வள்ளிபுனம் க.உ.வி.

**இடைநிலைப் பிரிவு**

மி.இமையவள்-மு/பாரதி வி., சு.யதுர்சிகா-மு/மந்துவில் அரசரட்ணம் வி., அ.டினுசியா-மு/புதுக்குடியிருப்பு றோ.க.வி.

**மேற் பிரிவு**

ந.சிந்துபைரவி-மு/உடையார் கட்டு ம.வி., செ.ஜென்சியா-மு/இரணைப்பாலை றோ.க.ம.வி, அ.அஜித்-மு/ஆனந்தபுரம் அ.த.க.பா. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை, காலம், பொறுமை இவை மூன்றுமே சிறந்த மருத்துவர்கள்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாளும் நடக்கும் வீதி விபத்தை தடுப்பது பற்றிச் சிந்திப்பது யார்?

போர் தந்த உயிரிழப்புக்களின் நினைப்புகளும் அவற்றின் தாக்கங்களும் எங்களை வதைத்துக் கொண்டிருக்கும் துன்பமான வேளையில், எங்கள் மண்ணில் நாளாந்தம் நடக்கும் வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணங்களை அறியும்போது இதயம் கருகிப் போகிறது. வீதியில் இறங்கினால் வீடு போய்ச் சேர முடியுமா என்று திடமாகக் கூற முடியாதளவில் வீதிப் பயணங்கள் மரணத்தை விளைவிப்பதாக உள்ளன.

2009-ம் ஆண்டுவரை எங்களை, போர் சங்காரம் செய்தது. இப்போது வீதி விபத்துக்கள் சங்காரம் செய்கின்றன.

கடந்த 30-ம் திகதிகூட யாழ்.மாவட்டத்தில் வீதி விபத்தில் சிக்கி இருவர் பலியாகியுள்ளனர். இதுதவிர வீதி விபத்தில் சிக்கி கால் முறிவு, கை முறிவு என்ற துன்பம் வேறு. இவ்வாறாக நாளாந்தும் வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணங்களையும் அவலங்களையும் தடுப்பது யார்? என்ற கேள்வி எழுகின்றது.

வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணங்களை செய்திகளில் படிப்பதால், விபத்துக்கள் நின்றுவிடப் போவதில்லை. எனவே விபத்துக்களைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வீதிகளின் அகலிப்பு, போக்குவரத்துப் பொலிஸாரின் கண்காணிப்பு என்ற நிலைமைகள் இருந்தும் முன்னைய காலங்களை விட இப் போது வீதி விபத்துக்கள் அதிகரித்திருப்பது வேதனைக்குரியது. எனவே இது தொடர்பில் விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சுருங்கக்கூறின் டெங்கு ஒழிப்புத் தொடர்பில் எங்ஙனம் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டனவோ அதே பாணியில் வீதி விபத்தைத் தடுக்கும் உபாயங்களை தீவிரமாக முன்னெடுப்பது இன்றைய அவசர தேவையாகும்.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் விசேட மாநாடொன்று கூட்டப்பட வேண்டும்.

நாளாந்தம் நடந்து கொண்டிருக்கும் வீதி விபத்து மரணங்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட செயலகம் தனது பொறுப்பாண்மையை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பது பொது மக்களின் விருப்பம்.

வீதி விபத்தைத் தடுத்தல் என்ற கோஷத்தோடு பாடசாலைகள், பொது நிறுவனங்கள் என எங்கும் பிரசாரமும் விழிப்புணர்வும் செய்யப்பட்டால் - வீதியில் இறங்கும் வாகனங்கள் விதி முறைகளைப் பின்பற்றுதல் கட்டாயம் என்ற அடிப் படையில் போக்குவரத்துப் பொலிஸார் லஞ்சம் அற்ற கடமையை மேற்கொண்டால் ஒரு கணத்தில் விபத்துக்களை குறைக்கவும் தடுக்கவும் முடியும்.

தொற்றுநோய்த் தாக்கத்தை தடுப்பதில் அக்கறை கொள்வதுபோல, உணவுச் சுத்தத்தில் கவனம் எடுப்பதுபோல, விலைக்கட்டுப்பாட்டு மீறல், சட்டவிரோத மின்சாரம் என்பவற்றுக்குத் தண்டம் விதிப்பதுபோல வீதிப் பயணத்தின்போது, ஒழுங்கு முறைகளை பின்பற்றாதவர்களுக்கு அதிகபட்ச தண்டனை விதிப்பதுடன், அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்கின்ற நடைமுறையையும் அமுலுக்குக் கொண்டு வந்தால் வீதிப் பயணம் பாதுகாப்புள்ளதாக அமையும்.

எனினும் இதுவரை எத்தனையோ விபத்து மரணங்கள் நடந்தும் எங்கள் நிர்வாகங்கள் மௌனமாக இருப்பதன் உள்நோக்கம் புரியாத புதிராகவே இருக்கின்றது.

இது விபத்து மரணங்களைவிட ஆபத்தானது என்பதை மட்டுமே இப்போதைக்கு நாம் சொல்லக் கூடியது.

### 19 இலட்சம் ரூபா நிதி மோசடி

# விஜயகாந்த் மீது பொறியியலாளர் குற்றச்சாட்டு; முதல்வரால் சோடிக்கப்பட்டதென அவர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் முன்னாள் சுகாதாரக் குழுத்தலைவருமான எஸ்.விஜயகாந்த், தன்னிடம் சுமார் 19 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்துவிட்டார் என மாநகர சபையின் பொறியியலாளர் பா.தீபரூபன் பரபரப்பு குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்துவந்த தற்காலிக சிற்றூழியர்களில் சுமார் 50 பேர் வரை யாழ். மாநகர சபையின் முன்பாக பந்தல் ஒன்று அமைத்து நேற்று முன் தினம் முற்பகல் 8 மணிமுதல் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவாக ஆளும் கட்சி உறுப்பினரும் முன்னாள் சுகாதாரக் குழுத் தலைவருமான எஸ்.விஜயகாந்தும் உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில் நேற்றையதினம் காலை 10 மணியளவில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கலந்துகொண்ட யாழ். மாநகரசபையின் பொறியியலாளர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தன்னிடம் விஜயகாந்த் முதலில் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாவைக் கடனாகப் பெற்றதாகவும் பின்னர் அதனை மீளவும் நேர்மையாகத் திருப்பிக் கொடுத்தார் எனவும் அதன்பின்னர் இரண்டாவது தடவையாக இரண்டரை இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றார் எனவும் அதுவும் நேர்மையாக திருப்பிக் கொடுக்கப்பட்டதாகவும் இதனால் உறுப்பினர் விஜயகாந்த் மீது தனக்கு அதீத நம்பிக்கை ஏற்பட்டதால் கடன் தொகையை அவர் அதிகமாகக் கோரிய போதிலும் தன்னிடம் இல்லாத சூழ்நிலையிலும் தனக்கு உரிமையான நகைகளை அடைவு வைத்து கடன் கொடுத்ததாகவும் இதுவரை சுமார் 19 இலட்சம் ரூபா பணத்தைத் தன்னிடமிருந்து பெற்றுள்ள உறுப்பினர் விஜயகாந்த், தன்னை ஏமாற்றி விட்டதாகவும் கூறினார்.

மேலும் விஜயகாந்த் நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டதால் அவர் மீது தான் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மாதம் 10 ஆயிரம் ரூபா பணம் வீதம் அவரிடமிருந்து பெற்றுத் தருவதாக கூறியுள்ளார் எனவும் இந்தப் பணம் வட்டி கட்டுவதற்கே தனக்குப் போதாதுள்ளதாகவும் பொறியியலாளர் தீபரூபன் மிகவும் கவலையுடன் தெரிவித்தார்.

கடனாகக் கொடுத்த 19 இலட்சத்தில் 18 இலட்சம் ரூபாவுக்கான ஆதாரம் தன்னிடம் உள்ளதெனவும் கடன் தொகையை மீளத் திருப்பிக் கொடுப்பார் என்ற நம்பிக்கையைத்தான் இழந்து விட்ட காரணத்தினாலேயே ஊடகங்களுக்கு இதனைத் தெரியப்படுத்த முன்வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.மாநகரசபையின் சுகாதாரக் குழுத் தலைவர் பதவியை இவர் தவறான முறையில் துஷ்பிரயோகம் செய்து பல இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தமை தொடர்பாக கடந்த காலங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு போதிய ஆதாரங்கள் இன்மையால் எந்தவித நடவடிக்கையையும் விஜயகாந்த் மீது எடுக்க முடியவில்லை எனவும் ஆனால் தற்போது போதிய ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதால் இது தொடர்பாக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முற்பட்டபோதே உண்ணாவிரதப் போராட்டத்தை உறுப்பினர் விஜயகாந்த் முன்னெடுத்து வருவதாகவும் முதல்வரும் குற்றஞ்சாட்டினார்.

மேலும் உறுப்பினர் விஜயகாந்த் மீது உரிய ஒழுக்காற்று நடவடிக்கையை கட்சி மேற்கொள்ளும் எனவும் முதல்வர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக உறுப்பினர் விஜயகாந்திடம் தொடர்புகொண்டு கேட்டபோது, இது முற்றுமுழுதாக சோடிக்கப்பட்ட தொரு குற்றச்சாட்டு.

ஆரம்பத்தில் என்னுடன் இணைந்து வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த பா.தீபரூபன் அதற்குப் பின்பு தானாகவே அதிலிருந்து விலகிச் சென்றுவிட்டார்.

அதற்குப் பின்னர் தற்போது எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காக மாநகர முதல்வரை அவர் பயன்படுத்தியுள்ளார்.

எனவே என்மீதான இந்தப் பொய்க் குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிக்கிறேன்.

அவரிடம் பெற்ற பணத்தினை முற்றாகத் திருப்பிக் கொடுத்துவிட்டேன் எனவும் உறுப்பினர் விஜயகாந்த் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சத்திய தரிசனம்



அறிவே வலிமை எனக் கூறப்படுகிறது. ஆனால் பண்பே அமைதியாகும். இயேசு, புத்தர், சங்கராச்சாரியார், முகமது, மத்வாச்சாரியார் இராமானுஜாச்சாரியார் இன்னும் பலர் மனித குலத்தின் இதயத்தில் இறவாத் தன்மை பெற்ற இருப்பிடவாசிகள் ஆகிவிட்டனர். பாண்டித்தியம் இத்தகு உயரிய வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றுத்தராது. புத்தகங்களில் வித்தகனாக இருத்தல், உங்களது பேசும் திறனை எடுத்துக்காட்டவோ அல்லது விளம்பரப்படுத்தவோ மட்டுமே உதவிடலாம். ஆனால் உங்களுடைய அனுபவத்தின் நீள அகலங்கள் தான் உண்மையில் என்ன? மேலும் நீங்கள் எத்தகு ஏமாற்றுக்காரன் ஆகிவிட்டீர்கள் என்பதனையும் ஆராய்ந்திடுங்கள். மனிதன் தனது தினசரி வாழ்வினை உண்மை நிரம்பிய பேச்சு, பண்பு நிரம்பிய செயல்கள் மற்றும் புனிதமான எண்ணங்கள் ஆகியவற்றால் நிரப்பிடவேண்டும்.

வாழ்க்கை என்பது காற்பந்து விளையாட்டு. நீங்களே பந்து. நீங்கள் எறியப்பட்டு இங்கும் அங்கும் உதைக்கப்படுகிறீர்கள். இந்தவகையாக நடத்தப்படுவதனை நீங்கள் எவ்வளவு காலம் தாங்கிட வேண்டும்? பந்தில் காற்று நிரம்பி உள்ளவரையில் அதனை விடுவியுங்கள். எவரும் அதனை உதைக்கமாட்டார்கள். அதனுள் இருக்கும் காற்று செருக்கு ஆகும். செருக்கு வெளியேறிய பின் பேரானந்தம் உள்ளே வருகிறது.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## துளசி



விஷ்ணுவின் மனைவியான இலட்சுமியின் குறிப்பீடாக விளங்குவது துளசி. ஐஸ்வர்யத்துக்காக இந்தப் பிரதிரூபத்தை நட்டு வளர்த்து பராமரித்து வருகின்றோம். மிகச் சிறந்த மருத்துவ மூலிகையாக வீடுகளின் முற்றத்தில் துளசித்தரை அமைத்துப் பாதுகாத்து வருவதுண்டு.

இது தேவாசுரர்கள் கடலைக் கடைந்தபோது உயர்ந்து வந்ததாகும். சில இடங்களில் துளசியை விஷ்ணுப்பிரியா என்ற பெயரால் அழைத்து விளக்கேற்றி பூஜைசெய்து வருவதற்கு காரணம் அதன் மகிமையும் அதன் இறைவன் அருகாமையும் ஆகும். மரணத்தைக்கூட அகற்றிப்பாயச் செய்யும் சக்தி துளசிக்கு உண்டு என்று நம் புராணங்கள் கூறுகின்றன.

சவத்தைச் சிதையில் அடக்கும்போது துளசிச் செடியின் சுள்ளிகளை சிதையில் போடுவதுண்டு. பாவத்தைப் போக்க துளசிக்கு சக்தியுண்டு என்ற நம்பிக்கையை இச்செயலுக்குத் தூண்டுகின்றது. மேலும் எல்லா தேவதைகளும் துளசியில் வசிக்கின்றனர் என்றும் ஒரு விசுவாசமுண்டு.

## புலமைப்பரிசில் பரீட்சையின் மீள் திருத்தத்திற்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் மீள்திருத்த கோரிக்கைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை அதிபர்கள் ஊடாக மீள் திருத்தத்திற்கான விண்ணப்பங்களை அனுப்பவைக்க முடியும் என திணைக்களம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான மேலதிக தகவல்கள், பரீட்சை பெறுபேறுகளுடன் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகளை www.donets.lk என்ற இணையத் தளத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும். (அ-2)

## கருத்தரங்குச் செயலமர்வு

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணிக் கற்கைநெறியின் இறுதிப் பரீட்சையை முன்னிட்டு முதலாம் வருட மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வு பேராசிரியர் நா. செல்வக்குமாரனினால் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆகவே இக்கருத்தரங்கில் சட்டமாணிக் கற்கைநெறியைத் தொடரும் முதலாம் வருட மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளும்படி யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (செ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சியில் இந்திய வீரர்கள்



சம்பியன்ஸ் லீக் போட்டிகள் ஒருபுறத்தே நடைபெற்றுக்கொண்டிருக்க இந்திய அணி தனது அடுத்த தொடர்களான அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்கா உடனான போட்டிகளுக்கு தன்னைத் தயார்படுத்திக், கொண்டிருக்கின்றது.
இங்கே இந்திய வீரர்கள் தீவிரமான வலைப் பயிற்சியில் ஈடுபடுவதையும் இதனை இளைஞர்கள் பார்த்து மகிழ்வதையும் படத்தில் காணலாம்.

# அசத்தியது ராஜஸ்தான்




ஓடாகோ அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் போட்டியில், ஹாட்ஜ் அதிரடியாக ஆடிக் கைகொடுக்க, ராஜஸ்தான் அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

இந்தியாவில் ஐந்தாவது சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20' தொடர் நடைபெற்றுவருகிறது. இதன் 'ஏ' பிரிவில் நடந்த லீக் போட்டியில் ராஜஸ்தான், நியூசிலாந்தின் ஒடாகோ வோல்ட்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி தலைவர் டிராவிட், களத்தடுப்பை தேர்வு செய்தார். விக்ரம்ஜீத் மாலிக்கிற்கு பதில், ராஜஸ்தான் அணியில் ராகுல் சுக்லா இடம் பெற்றார். ஒடாகோ அணிக்கு ரதர்போர்டு, புரூம் ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. அசோக் மனேரியா வீசிய முதல் ஓவரில் இருவரும் தலா ஒரு பவுண்டரி அடித்தனர். போட்டியின் நான்காவது ஓவரை ராகுல் சுக்லா வீசினார். முதல் பந்தில் ரதர்போர்ட் (5) போல்டானார். 3ஆவது பந்தில் அணித் தலைவர் பிரண்டன் மெக்கலம், 'டக்' அவுட் டானார். 5ஆவது பந்தில் பூர்டரையும் (0) வெளியேற்றி அசத்தினார் சுக்லா. மறு முனையில் புரூமை (11), வொட்சன் வெளியே அனுப்ப, ஒடாகோ அணி 21 ஓட்டங்களுக்கு, 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

பின்னர் வந்த வீரர்கள் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தாத காரணத்தி னால் ஒடாகோ அணி 20 ஓவரில் 7 விக் கெட்டுகளை இழந்து 139 ஓட்டங்களை மாத் திரம் பெற்றது. நீஷம் 32, டஸ்காட்டே (26), பட்லர் (25), ஓட்டங்களைப் பெற்றனர். நாதன மெக்கலம் (28), வாக்னர் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ராஜஸ்தான் சார்பில் ராகுல் சுக்லா 3 விக்கெட் வீழ்த்தினார்.

எட்டிவிடும் இலக்கை துரத்திய ராஜஸ்தான் அணிக்கு, டிராவிட், ரகானே ஜோடி இம்முறை சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தது. பட்லர் வீசிய முதல் ஓவரில் ரகானேயின் இரு பவுண்டரிகள் உட்பட 15 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. தொடர்ந்து அசத்திய ரகானே, வாக்னர் ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார்.

இவருக்கு கைகொடுத்த டிராவிட் (10) விரைவில் ஆட்டமிழந்தார். சாம்சன் (5), வொட்சன் (2) வந்த வேகத்தில் கிளம்பினார். பின்னியும் (1) ஏமாற்ற, போட்டியில் திடீரென "டென்ஷன்" ஏறியது.

அடுத்து ரகானேயுடன் இணைந்த அனு பவ வீரர் ஹாட்ஜ், வாக்னர் பந்துகளை பவுண்டரிக்கு விரட்டினார். தொடர்ந்து மேக்மில்லன், நீஷம் பந்துகளை சிக்சருக்கு விரட்டினார். தொடர்ந்து ரகானே அரைசதம் (52) அடித்து, ஆட்டமிழந்தார். பால்க்னர் (2) நீடிக்கவில்லை. கடைசியில் ஹாட்ஜ் ஒரு பவுண்டரி அடிக்க, ராஜஸ்தான் அணி 19.1 ஓவரில், 6 விக்கெட்டுக்கு 142 ஓட்டங்களை எடுத்து, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 23 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்த ஹாட்ஜ், கூப்பர் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சொந்த மண்ணில் அசைக்கமுடியாத அணியாக வலம் வருகிறது ராஜஸ்தான் அணி. ஒடாகோவை வீழ்த்திய இந்த அணி, ஜெய்ப்பூரில் தொடர்ந்து 12ஆவது வெற்றியை பதிவு செய்தது. மறுபுறம், உள்ளூர் தொடர் (10 வெற்றி) மற்றும் தகுதிச்சுற்று; (3) உட்பட மொத்தம் 15 போட்டிகளில் தொடர்ந்து அசத்தி வந்த, ஒடாகோ அணியின் வெற்றிநடைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

# இந்திய அணிக்கு யுவராஜின் வருகை மகிழ்ச்சியளிக்கிறது



**- விராட்கோலி**

அவுஸ்திரேலியா தொடருக்கான இந்திய அணியில் யுவராஜ் சிங் மீண்டும் இடம்பிடித்தார். உள்ளூர் போட்டியில் சிறப்பாக விளையாடிதால் 9 மாதங்களுக்கு பிறகு அவர் தேர்ந் தெடுக்கப்பட்டார். கூறியுள்ளார் யுவராஜ் சிங்கை மீண்டும் ஆடுகளத்தில் சந்திப்பது மகிழ்ச்சி என்று வீராட் கோலி இது தொடர்பாக அவர் கூறுகையில்,

யுவராஜ்சிங் திறமையான வீரர். அவர் அணிக்கு மீண்டும் திரும்புவார் என்பதில் எனக்கு சந்தேகம் இருந்ததில்லை. அவர் பிரான்ஸ் நாட்டுக்கு பயிற்சிக்காக சென்றதில் இருந்து யாருடனும் பேசவில்லை. அவர் உடல் எடையை குறைத்து முன்பைவிட மெருகேறி இருக்கிறார். அவரை களத்தில் மீண்டும் சந்திப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

அவுஸ்திரேலிய அணி தலைவர் மைக்கேல் கிளார்க் இந்திய தொடரில் இருந்து விலகினாலும் அந்த அணி திறமை வாய்ந்தது. அவர்களை எளிதாக எடுத்து கொள்ளமாட்டோம். தென்னாபிரிக்க தொடரை ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கிறாம். இந்த தொடர் இளம் வீரர்களுக்கு அவர்களது திறமை பரிசோதித்து கொள்ள உதவும் என்றார்.

## இந்தியச் சுற்றுப் பயணத்துக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடும் அவுஸ் திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் காயம் காரணமாக மைக்கேல் கிளார்க் விலகியுள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதி தொடங்வுள்ள இத்தொடரில், காயம் காரணமாக மைக்கல் கிளார்க் விலகியுள்ளார். இவருக்கு பதிலாக கால்லும் ஃபெர்குசன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

கிளார்க் விலகியுள்ளது அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். இவருக்கு பதிலாக ஜார்ஜ் பெய்லி அணித் தலைவராக பணியாற்றுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரி-20 அணி விவரம் :** ஜார்ஜ் பெய்லி (அணித்தலைவர்), நாதன் கால்டர்-நீல், சேவியர் டோஹெர்டி, ஜேம்ஸ் ஃபாக்னர், அரோன் ஃபிஞ்ச், பிராட் ஹாடின், மோய்சஸ் ஹென்றிக்ஸ், மிச்சல் ஜான்சன், நிக் மேடின்சன், கிளென் மேக்ஸ்வெல், கிளின்ட் மகாய், வோஜஸ், வாட்சன்.

**ஒருநாள் போட்டிக்கான அணி விபரம் :** பெய்லி(அணித்தலைவர்), நாதன் கால்டர்-நீல், சேவியர் டோஹெர்டி, ஜேம்ஸ் ஃபாக்னர், ஃபெர்குசன், அரோன் ஃபிஞ்ச், பிராட் ஹாடின், மோய்சஸ் ஹென்றிக்ஸ், ஃபிலிப் ஹியூஜஸ், ஜான்சன், மேக்ஸ்வெல், கிளின்ட் மகாய், வோஜஸ், வாட்சன்.




## சர்வதேச தடகள விருதுக்கு பரிந்துரை

2013ஆம் ஆண்டுக்கான சர்வதேச தடகள வீரருக்கான விருதுக்கு ஜமைக்காவின் உசைன் போல்ட் மற்றும் பிரிட்டனின் முகமது ஃபரா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இவ்விருதுக்காக சமீபத்தில் நடைபெற்ற போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்ட ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் தலா 10 தடகள வீரர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. இவர்களில் யார் இவ்விருதைப் பெறுவர் என்பது வாக்கெடுப்பின் அடிப்படையில் தெரியவரும். இம்முடிவு வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி வெளியிடப்படும்.


சமீபத்தில் நடந்து முடிந்த உலக சம்பியன்ஷிப் போட்டியின் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் தங்கம் வென்றார் போல்ட். அதேபோல், உலக சம்பியன்ஷிப் போட்டியின் 5 ஆயிரம் மற்றும் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் பந்தயப் போட்டியில் ஃபரா தங்கம் வென்றார்.

இவர்களிருவரில் ஒருவருக்கு இவ்விருது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பியன்ஸ் லீக் இருபது-20

# ஸ்கோர்செர்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது மும்பை



சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்த ஆட்டத்தில்சிறப்பாக வென்றால் மட்டுமே அரையிறுதிக்கு தகுதி பெற முடியும் என களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி, நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணியை துடுப்பெடுத்தாடுமாறு கேட்டுக் கொண்டது.

இதனையடுத்து களமிறங்கிய பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 149 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் பெர்த் ஸ்கோர்செர்ஸ் அணி சார்பாக வைட்மான் ஆட்டமிழக்காமல் 32 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 நான்கு ஓட்டம் உட்பட 51 ஓட்டத்தினையும் ஏகர் 35 ஓட்டத்தினையும் கிராட்ரமிட் 28 ஓட்டத்தினையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் மும்பை இந்தியன் அணி சார்பாக குல்டர்நில் 3 விக்கெட்டினையும் ஓஜா 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.


150 ரன்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் சச்சின் ரன் எதும் எடுக்காமல் அவுட் ஆனார். இருப்பினும் அணித்தலைவர் ரோகித் ஷர்மாவும், ஸ்மித் அதிரடியாக அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர்.

இறுதியில் மும்பை இந்தியன்ஸ் அணி 13.2 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 152 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ரோகித் சர்மா ஆட்டமிழக்காமல் 51 ஓட்டத்தினையும் ஸ்மித் 48 ஓட்டத்தினையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் பெர்த் ஸ்கோர் செர்ஸ் அணி சார்பாக பிரஎ்ட ஒவ், பிரெட் ஹொக் தலா 2 விக்கெட்டினை கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் மும்பை இந்தியன் அணியின் நெட் ரன் ரேட், ஒடாகோ அணியின் நெட் ரன் ரேட்டை விட அதிகமானதால் மும்பை இந்தியன்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.



இப்போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை இந்தியன் அணியின் அணித் தலைவர் ரோஜித சர்மா தெரிவு செய்யப்பட்டார்.

## அரசு-கூட்ட...

கோரி இலங்கை அரசிடமும், தமிழ்த் [தே]சியக் கூட்டமைப்பிடமும் கோரிக்கை விடுப்பது உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

இதனை உறுதிப்படுத்திய சர்வமத அமைப்பின் உறுப்பினரொருவர், இருதரப்பு பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிப்பது சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்குத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விடுத்துள்ள அறிவிப்பையும், கூட்டமைப்புடன் ஒத்துழைத்துச் செயற்படத் தயார் என அமைச்சர் பசில் ராஜபக்ச விடுத்துள்ள அழைப்பையும் தர்மசக்தி வலையமைப்பு வரவேற்றுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். (செ-11)

## பொலிஸ் உத்தியோகத்தருக்கு வாள்வெட்டு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைக்கோட்டைப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மீது இனம்தெரியாத நபர் ஒருவர் வாளினால் வெட்டிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்தச்சம்பவம் நேற்று இரவு 9.30 மணியளவில் ஆனைக்கோட்டைப் பகுதியில் கொக்குவிலுக்கு செல்லும் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

வீதியால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மறித்து சோதனை மேற்கொள்ள முற்பட்டபோதே குறித்த நபர் பொலிஸ் உத்தியோகத்தர் மீது வாளினால் வெட்டிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளார்.

இதில் மாத்தளையைச் சேர்ந்த வசந்த அபேரத்ன (வயது 37) என்பவரே கையில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-6)

## உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு மின் ஒளியில் யங்கம்பன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது.

மற்றைய அரையிறுதிப் போட்டி நாளை இரவு 7.30 மணிக்கு மின் ஒளியில் அம்மைதானத்திலேயே இடம்பெறவுள்ளது.


இப்போட்டியில் திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதவுள்ளது. (24)

## பதவிப்பிரமாணம்...

பந்தன் தலைமையில் கொழும்பில் நேற்று மாலை 6.15 மணி தொடக்கம் இரவு 9.30 மணிவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகத்தில் இடம் பெற்றது.

இதில் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தருமலிங்கம் சித்தார்த்தன் உள்ளிட்ட கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் பங்கு கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## அரையிறுதியில் டிரினிடாட்



டிரினிடாட் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் இருபது-20 போட்டியில், சென்னை அணி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்த, 8 விக்கெட் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. அபாரமாக ஆடிய டிரினிடாட் அணி, மூன்றாவது வெற்றியை பதிவு செய்து, அரையிறுதிக்கு முன்னேறியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி 19.4 ஓவரில் 118 ரன்களுக்கு சுருண்டது. டிரினிடாட் அணி சார்பில் ரயாத் எம்ரித் 3, ரவி ராம்போல், சிம்மன்ஸ் தலா 2 விக்கெட் கைப்பற்றினர். சுலப இலக்கை விரட்டிய டிரினிடாட் அணி 15.1 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 119 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன்மூலம் அவ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது. சகலதுறை வீரராக அசத்திய டிரினிடாட் அணியின் சிம்மன்ஸ், ஆட்டநாயகன் விருதை வென்றார்.

## பதவி விலகு...

யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


ஐக்கிய தேசியக் கட்சி தற்போது பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக தேசிய ஊழியர் சங்க, பெற்றோலிய கூட்டுத்தாபன கிளையின் செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

புதிய யோசனைகளை முன்வைக்குமாறு கட்சி தெரிவித்துள்ள நிலையில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என்பதையே அனைவரும் இன்று கூறி வருவதாகவும், முதுகெலும்பு இருப்பின் நாளை (இன்று) நடைபெறவுள்ள கட்சி செயற்குழு கூட்டத்தில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஆனந்த பாலித குறிப்பிட்டுள்ளார.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தலைவராக பதவி வகிப்பதால், மக்களுக்கு எவ்வித பலனும் கிடைப்பதில்லை என தேசிய ரயில்வே சேவைகள் தொழிற்சங்கத்தின் பிரதம செயலாளர் நிஹால் குணரத்ன இதன்போது தெரிவித்துள்ளார்.

மக்களின் வாக்குகள் மூலம் தெரிவாகாத செயற்குழு உறுப்பினர்களே தொடர்ந்தும் தலைவரைப் பாதுகாத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)



தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன் குணசீலன் டுசாந் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் 94 கிலோகிராம் எடைப்பிரிவில் தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார். அவருடன் அதிபர் வே.அரசசேகரி, பொறுப்பாசிரியர் வி.ஐங்கரன் அவர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக்கூறத் தவ...

கள் நிலைமைகள் குறித்து ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்கா வெளிப்படுத்திய கவலை குறித்து இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில், இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பான ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை அமெரிக்கா வரவேற்கிறது.

கருத்துச் சுதந்திரத்தின் மீதான அடக்குமுறைகள், மனிதவுரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் நீதித்துறை மீதான தலையீடுகள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்த ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளரின் கவலைகளில் அமெரிக்காவும் பங்கெடுக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற போருக்குப் பின்னரான பொறுப்புக் கூறுவது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது விட்டால், அது தொடர்பிலான சர்வதேச விசாரணையைக் கோரும் அழைப்புக்கள் தொடரும் என்ற ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளரின் மதிப்பீட்டை அமெரிக்காவும் சுட்டிக்காட்டுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கு காத்திரமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளாது போனால, அது தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்தப்படும் என ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 24-வது கூட்டத் தொடரில் இலங்கையின் மனிதவுரிமை நிலைவரங்கள் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக உரையாற்றிய அமெரக்கப் பிரதிநிதி எய்லின் சாம்பர்லீன் டோனஹே எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், பொறுப்புக்கூறுவது தொடரபில் காணப்படும் முன்னேற்றமற்ற தன்மை, சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் என்ற ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளரின் கருத்தை நாமும சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என எய்லின் சாம்பர்லீன் டோனஹே கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## காணி, பொலிஸ் அதி...

எனினும், இந்தச் சட்டத்திலுள்ள காணி அதிகாரங்கள் குறித்து உயர் நீதிமன்றம் தமது கருத்து வியாக்கியானத்தை வழங்கியுள்ளது.

13-வது திருத்தச்சட்டத்தின் 9-வது அதிகாரத்தின் 1 ஆம், 2ஆம், 3 ஆம் ஏற்பாடுகளில் மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவது ஏற்பாட்டில் மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் பற்றிக் குறிப்பிடுகின்ற அதேவேளை, இரண்டாம் ஏற்பாட்டில் மாகாண சபைகளுக்குரிய காணி, பொலிஸ், கல்வி முதலான அதிகாரங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதற்கமைய உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள வியாக்கியானத்தில் அனைத்து அரச காணிகளும் மத்திய அரசுக்கு உரித்தானவை என்றும், அரச காணியொன்றைத் தனியாருக்கு விற்கும் போதோ அல்லது வழங்கும் போதோ அது ஜனாதிபதியூடாகத்தான் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு உரியவை என 13-வது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பால் இதை மாற்ற முடியாது. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நீதிமன்றத்தால் மாற்ற முடியாது. நாடாளுமன்றத்தால் மட்டுமே அதை மாற்றமுடியும்.

வட மாகாண மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைய அந்த மாகாண சபையைக் கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மாகாணசபையையும் நிறுவவுள்ளது.

பதவிப் பிரமாணம் செய்து வட மாகாண சபையைக் கூட்டமைப்பினர் நிறுவிய பின்னர் மாகாணசபைகளுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களையும் அரசு வழங்க வேண்டும்.

ஏனைய மாகாணங்களுக்கு வழங்கிய அனைத்து அதிகாரங்களையும் அரசு வட மாகாண சபைக்கு வழங்கவேண்டும். அதில் எந்த மாற்றங்களையும் செய்யத் தேவையில்லை.

இந்த அதிகாரங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமாயின், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினூடாக அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்றார் அமைச்சர் திஸ்ஸ விதாரண. (செ-11)

## பாலித கோஹ...

இவர் ஐ.நா. உடன்படிக்கை பிரிவின தலைவராக இருந்துள்ளார். இந்த உடன்படிக்கை பிரிவு ஐ.நா. செயலாளர் நாயகம் ஒப்படைக்கும் பணிகளை செய்வதற்கு பொறுப் பாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## நாடு திரும்...

சென்றார்.

அங்கு பல நாடுகளின் தலைவரகளைச்சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்து ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். (செ-11)

## கூட்டமைப்பின் கூட...

உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பில் நேற்று மாலை 6.15 மணிதொடக்கம் இரவு 9.30 மணி வரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகத்தில் இந்தக்கூட்டம் இடம்பெற்றது.

இதில் வடக்குமாகாணத்தின் முதலமைச்சர் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விகனேஸ்வரன், தமிழத் தேசியக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர்மாவை சேனாதிராஜா, அக்கட்சியின் ஊடகப் பேச் சாளரும்நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமறை உறுப்பினரும புளொட் அமைபபின் தலைவருமான தருமலிங்கம் சித்தார்தன் உள்ளிட்ட கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் உறுப்பினர்கள் எனப் பலர் பங்கு கொண்ட னர்.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் வடக்கு மாகாணசபையின் அமைச்சர்கள் யார் என்பதுதொடர்பாக முடிவெடுக்கப்படும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பன் உயர் பீடத்தகவல்கள் முன்பு தெரிவித்திருந்தன.

இருப்பினும் நேற்றைய கூட்டததிலும் எந்த விதமான முடிவும் எட்டபடாமல் கூட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட் டுள்ளதோடு நாளை 4 ஆம் திகதி மீண்டும் கூட்டம் கூட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாண சபையின முதலமைச்சராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் ஏணைய மாகாண அமைச்சர்கள் தெரிவு இழுபறி நிலையில் உள்ளது.

மாவட்டத்திற்கு ஒரு அமைச்சர் என்ற ரீதியில் அமைச்சுப் பதவி உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு ஒரு அமைச்சுப்பதவி என்ற ரீதியில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தநிலையில் நேற்றைய கூட்டத்தின்போது தமிழரசுக் கட்சிக்கு இன்னும் இரண்டு அமைசசுப் பதவி வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்ததாகவும் தெரியவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)


### இலகு ஆங்கில கல்வி

இலகு முறையில் அடிப்படை ஆங்கில அறிவைப் பெறவும், மற்றும் ஆங்கில மொழி மூல கணித, விஞ்ஞான பாடங்களும் கற்பித்துக் கொடுக்கப்படும்.

(4069)

தொடர்பு இல: T.P : 0778576896


## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடக்கிற்கு சிறந்த பெறுபேறுகள்

### வாழ்த்துச் செய்தியில் ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றதையிட்டு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அம் மாணவர்களுக்கு தம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இப் பெறுபேறுகளின் அடிப்படையில் யா/ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய மாணவன் செல்வன் பரமானந்தம் தனுராஜ் 194 புள்ளிகளைப் பெற்று வடமாகாணத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளிட்டதை அடுத்து மாணவர்களின் பெறுபேறுகள் பெற் றுக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் பெறுபேறுகள் சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் இம்முறை அதிகரித்து இருப்பதனையும் மாணவர்கள் பெற்றுக் கொணட புள்ளிகள் அதிகரித்திருப்பது அவர்களின் கல்வி மட்டம் உயாந்திருப்பதனைக் காட்டுகின்றது.

இவ்வுயர்விற்காக உழைத்த அனைவருக்கும் வடமாகாண ஆளுநர் தனது நன்றியினைத் தெரிவித்ததுடன் இம் மாணவர்கள் எதிர்காலத்தில் மேலும் கல்விச்சாதனைகளை படைத்திட வேண்டுமென வாழ்த்தியுள்ளார். (செ)

## நல்லூர் கோட்ட அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலை அதுபர்கள், செப்ரெம்பர் மாத ஆசிரிய ஆளணி விபரத்தை இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னதாக நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு கோட்டக்கல்வப் பணிப்பாளர் எஸ்.சண்முககுமார் கேட்டுள்ளார். (ந)


### கணினிகள் அதிரடி விலைக் கழிவு

Dell optiplex 745
3.4GHZ Dual Core
80GB HDD
1GB RAM
DVD
Rs.13,500/=

Lenova
1.8GHZ Core 2 Duo.
80GB HDD
1GB RAM
DVD Writer
Rs.14,500/=

Hard Disk
40GB IDE - 1100/=
30GB SATA - 2500/=
160Gb SATA - 3500/=

Mother Board
LGA DDR 1 - 3000/=
478 - 2500/=
RAM DDR I (512MB) - 900/=

HP DC 7100
2.8GHZ HT LGA
80GB HDD
1GB RAM
DVD
Rs.9,500/=

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
No,7468:Point Pedro Road, Nallur.
(யாழ். மாநகரசபை முன்பாக)
Mobile: 077 9689043
(C-4987)

### ஆங்கிலம் / சிங்களம் - வகுப்புக்கள்

க.பொ.த (சா/த) ஆங்கிலம் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு : Papar Class - சனி, ஞாயிறு - மாலை 5 மணி.
Spoken & Grammar - சனி, ஞாயிறு - மாலை 6 மணி.
சிங்களம் அடிப்படையிலிருந்து பேச்சு - சனி, ஞாயிறு மாலை 4.30 மணி, சனி, ஞாயிறு - மாலை 6 மணி, சனி, ஞாயிறு - மாலை 7 மணி
பதிவுகள் இன்று முதல்
இடம்: சதாபொன்ஸ் கல்வி நிலையம், அல்வாய். T.P : 0212263206
(C-4983)

### VACANCY FIELD STAFF

Northern Academic and Leadership Training Center (NALTC)
நிறுவனத்திற்க Field Staff (ஆண்கள் தேவை]
சாவகச்சேரி, பருத்துறை, மானிப்பாய்,யாழ்ப்பாணம்.
தகைமை: A/L
தொடர்புகளுக்கு:
116, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
நேரில் சமூகம்தரவும்.
04.10.2013 - 10.00 மணிமுதல் - 12.00 மணிவரை
(C-4986)

### பாராட்டி வாழ்த்துகிறோம்



திருக்குமரன் ஸ்ரீமதி தம்பதிகளின் புதல்வன்
சதுர்ஜன்

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் சதுர்ஜன் புலமைப் பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதோடு சதுர்ஜன் பல துறைகளிலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர் :
அம்மம்மா, மாமாமார், பெரியம்மாமார், சித்தி, அக்கா, தங்கைமார், தம்பி

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.
(C-4985)

### OPTIMO GROUP SRI LANKA VACANCY

Optimo Group Company ஆரம்பிக்கும் 2-வது கிளைக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆர்வமும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

- மேற்பார்வையாளர் (Supervisor)
- முகாமைத்துவ பயிற்சியாளர் (Management Trainee)
- களஞ்சிய மேற்பார்வையாளர் (Store Supervisor)
- சந்தைப்படுத்துனர்கள் (Distributors)

ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

- வயதெல்லை 18-35
- தங்குமிடம் & உணவு இலவசம்.
- இலவசமாக சிங்கள & ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு : 077 190 6728, 077 556 6224
(4074)



உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த சம்பளத்துடனான வேலைவாய்ப்பை இலக்காக கொண்ட பயிற்சிநெறி
FREE WebDesigning,Multimeida,Networking
பங்குபற்ற விரும்புவோர் உங்களது <NAME> Free என type செய்து 772 395 895 க்கு sms செய்யவும். மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.
(C-4980)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.